www.tamilarangam.net

TAMIL INFORMATION CENTRE
தமிழ் தகவல் நடுவம்

இதழ்: 6&7
ஒக்ரோபர்
நவம்பர்
1993

# மீட்சி

தமிழ் தகவல் நடுவத்தின் மாதாந்த வெளியீடு

இன்று உலகில் காணப்படும் நாடுகளில் குடிவரவு சம்பந்தப்பட்ட விவகாரத்தில் மிதமான கொள்கையையும், விருந்தோம்பும் பண்பையும் கொண்ட நாடு என்ற கௌரவத்தை அவுஸ்திரேலியா பெற்றுள்ளது. இந்நாட்டில் ஏறத்தாள 140க்கு மேற்பட்ட நாட்டவர்கள் வந்து குடியேறியுள்ளனர். இந்நாடு கொமன்வெல்த் அங்கத்துவ நாடுகளிலுமொன்றாகும். அவுஸ்திரேலியாவில் ஐரோப்பியர் குடியேறுங் காலத்தில், இருபத்தி ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு வந்து குடியேறி வாழ்ந்த பூர்வீகக் குடிமக்கள் பலரைப் படுகொலை செய்து விட்டனர். இக்கசப்பான அனுபவங்களினால், அவுஸ்திரேலியர் மனநிலையில் இனப்படுகொலை சம்பந்தமாக ஓர் நெருடல் நிலை காணப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையின் காரணத்தினாலேதான், இலங்கைத் தமிழர் துயர்களைப் புரிந்து கொள்வதிலும் இலங்கைப் பிரச்சினைக்குத் தகுந்த நியாயமான தீர்வு கிட்டவேண்டுமென்பதிலும் மிகுந்த அக்கறையை அவுஸ்திரேலியர் காட்டி வருகின்றார்கள் என எண்ணத் தோன்றுகிறது. அண்மைக்காலத்தில் உலகளாவிய ரீதியில் பல மாற்றங்கள் நடந்து முடிந்தும், நடந்து கொண்டும் இருக்கின்றன. வல்லரசுகளிற்கிடையே இருந்து வந்த "பனிப்போர்" எனும் பதட்டநிலை ஓய்ந்துவிட்டது. ஐரோப்பிய நாடுகளிற்கிடையே பொருளாதாரக் கூட்டுறவுகள் ஏற்பட்டு, ஐரோப்பிய நிலப்பரப்பு ஒரு கோட்டையாக மாறிவருகிறது. இத்தகைய வரலாற்று நிகழ்வுகள் மிதவாதக் கொள்கை கொண்ட, விருந்தோம்பும் பண்புடைய அவுஸ்திரேலியா போன்ற நாடுகளைக்கூட நிலைகுலைய வைப்பதை, அகதிகளாக அண்மைக் காலத்தில் அங்கு சென்று குடியேற முயற்சிப் போருக்கு நடக்கும் செயல்களிலிருந்து அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவற்றைப் பிறநாடுகளில் வாழும் ஈழத் தமிழராகிய நாமும் தெரிந்து வைப்பது அவசியமாகும்.

ஈழத்தமிழர்கள் அவுஸ்திரேலியாவிற்குச் சென்று குடியேறுவது பலவருடங்களாக வழக்கமாக இருந்தாலும், 1983ஆம் ஆண்டின் இனக்கலவரத்திற்குப் பின்பு இந்நாட்டிற்கு கூடிய தமிழர்கள் செல்ல முனைந்தனர் என்று கூறுவது பொருத்தமாகும். அநேக ஈழத்தமிழர் அவுஸ்திரேலியா செல்ல முடிந்தமைக்குக் காரணம் அவுஸ்திரேலிய அரசி

## அவுஸ்திரேலியாவின் குடிவரவுக் கொள்கையும் அகதிகள் பற்றிய நிலைப்பாடும்

டம் ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக இருந்த அனுதாப உணர்வுகளும், கருத்துக்களுமேயாகும். இனப்பிரச்சினையினால் பல்வேறு பாதிப்புகளை அடைந்த தமிழ் மக்களுக்குத் தகுந்த வதிவிட அனுமதி, முறையான பராமரிப்புகளை வழங்குவதில் முன்னோடியாக இருந்த பல நாடுகளில் அவுஸ்திரேலியாவும் ஒன்று. இத்தகைய நிலை ஏற்பட, பல காலங்களுக்கு முன்பு அங்கு சென்று குடியேறிய ஈழத் தமிழர்களின் முயற்சிகளே என்பதை நாம் மறத்தல் கூடாது. இங்கு வாழும் தமிழ் மக்களிடம் இருந்து நாம் பலவற்றைக் கற்க வேண்டியுள்ளது. தமிழீழப் போராட்டம், ஈழத்தமிழர் பிரச்சினை போன்ற விடயங்களில் அவுஸ்திரேலியாவாழ் தமிழ் மக்கள் சளைக்காமல் தொடர்ச்சியாக அவுஸ்திரேலிய அரசின் கவனத்திற்கு எடுத்துக்கூறி வந்தமையினாலேயே அவுஸ்திரேலிய அரசும் எம்மில் அக்கறை கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. எனவே இவர்களது சேவை அளப்பரியதும், பாராட்டத்தக்கதும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதிப்புக்குரியதுமாகும். தொடர்ந்தும் இவர்களது முயற்சிகளில் வெற்றிபெற வைப்பதில், பிற நாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் பங்குண்டு என்பதும், அவர்கள் கடமையில் ஒன்றென்பதும் முக்கியமானதாகும்.

அவுஸ்திரேலிய அரசின் நடை முறையில்இன்று பல மாற்றங்களைக் காணக்கூடியதாகவுள்ளது. இம்மாற்றங்கள் முக்கியமாக அகதிகளாகப் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களைப் பாதிக்கக்கூடியதாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட குடிவரவுச் சட்டமும் செயல்முறைகளும் பலரைக் குழப்ப நிலைக்குள்ளாக்கியது. குறிப்பாக ஈழத்தமிழர் நலன்கருதிப் பணிபுரிந்து வரும் தாபனங்களை வியப்புக்குள்ளாக்கியது. அடிப்படை மனிதவுரிமைகளைக் காப்பதற்கென உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்கள், இன்று அவ்வுரிமைகளைப் பேண முடியாத வகையில் மாற்றியமைக்கப்படுவதைக் காணச் சஞ்சலமாகவும் குழப்பமாகவும் இருப்பதாகப் பலர் கூறிக் கொள்கிறார்கள்.

இலங்கையில் 1983 ஜூலை – ஓகஸ்ட் மாதங்களில் தமிழர்களுக்கெதிராகத் திட்டமிட்ட வகையில் நடந்த படுகொலையினைத் தொடர்ந்து, அவுஸ்திரேலிய அரசு ஜூலை 29 இலும், பின்பு ஒக்டேராபர் 7ஆம் திகதியிலும் ஈழத்தமிழர் அங்கு வந்து வதிவிட அனுமதியுடன் வாழ்வதற்கான பிரத்தியேக ஏற்பாடுகளைச் செய்திருப்பதாக அறிவித்தது. அதாவது, அவுஸ்திரேலியாவில் வசிப்பவர் ஒருவர், தமது உறவினர்களை ஏற்கத் தயாராக உள்ளார் எனும் பட்சத்தில், அவர்கள் அங்கு செல்லக் கூடியதாகவிருந்தது. ஆனால் நண்பர்கள் அல்லது சமூகத் தாபன உறுப்பினர் என்ற முறையிலோ எவரையும் வரவழைக்க முடியாது.

பாதிப்படைந்த தமிழர்களுக்கென அவுஸ்திரேலிய அரசு பிரத்தியேக ஏற்பாட்டைச் செய்துள்ளது என்று கூறிக்கொண்ட போதும், மேற்படி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தமையினால், 1983இல் பாதிப்படைந்த பலருக்கு பிரத்யேகக் குடிவரவு ஏற்பாடுகளினால் பயன் கிடைக்காது போயிற்று. கலவரத்தினால் பாதிப்படைந்த தமிழர்கள் தொகையுடன் அவுஸ்திரேலியாவினுள் நுழைவதற்கு அனுமதி கிடைத்தவர்களின் தொகையினை ஒப்பிட்டுப் பார்த்தாலே உண்மைநிலை புலப்படும் என வாதிடுவாருமுள்ளனர். ஆனால் இலங்கையில் தொடரும் போரின் பாதிப்புக்களிலிருந்து தப்புவதற்காகத் தமிழர்கள் பலர் தொடர்ச்சியாகப் பல வழிகளில் அவுஸ்திரேலியா வந்தடைந்தவண்ணமுள்ளனர். இவர்களில் பலருக்கு அங்கு நண்பர்களோ, உறவினர்களோ கிடையாது. இந்நிலையில் இவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்கனவே அங்கு குடியேறியுள்ள தமிழ்ச் சமூகமே ஏற்று வருகிறது. இதில் அவுஸ்திரேலியத் தமிழ் அகதிகள் கழகம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்றவற்றின் பணி குறிப்பிடத்தக்கது.'

தமிழ் அகதிகள் கழகத்தினர் கருத்தின்படி பல தமிழர்கள் 1951ஆம் ஆண்டின் ஐ.நா.ஒப்பந்த மரபுக்கமையவும், மனிதாபிமான முறையில் இரக்கம் காட்டும் குடிவரவுச் சட்டப்பிரிவு 6A(1)e இன் அடிப்படையிலும் நியூசவுத் வேல்ஸ், விக்டோரியா போன்ற இடங்களில் தஞ்சங் கோரியுள்ளனர். DILGEA எனும் (Department of Immigration, Local Government and Ethnic Affairs) மதிப்பீட்டாளர்களின் கருத்துப்படி மனிதாபிமான அடிப்படையில் தஞ்சங் கோரியவர்களது விண்ணப்பங்களே கூடிய சிக்கல்களைக் கொடுத்தன. ஒரு கட்டத்தில் நியூசவுத் வேல்ஸிலும், விக்டோரியாவிலும் இது போன்ற விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவது முற்றாக நிறுத்தி வைக்கப்பட்டது.

நிறுத்தி வைக்கப்பட்டதற்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும், அவற்றினைப் பரிசீலனை செய்த அதிகாரிகட்கு தமிழர்கள் படும் இன்னல்கள் பற்றிய அறிவு முற்றாக இல்லாமையும், மேற்படி விண்ணப்பங்களை எவ்வாறு சட்டத்திற்கமைய அணுகுவது என்ற சிக்கல் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டமையுமே, அவை நிறுத்தப்பட்டமைக்குப் பிரதான காரணங்களெனலாம். இப்பிரச்சினைகளால் முடிவெடுப்பதில் நீண்ட தாமதம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து மேலும் பல பிராந்தியக் காரியாலயங்கள், மனிதாபிமான அடிப்படையிலான விண்ணப்பப் பரிசீலனைகளை தாம் ஒத்தி வைத்துள்ளதாக அறிவித்துள்ளன. இத்தகைய விண்ணப்பங்களை DORS (Determination of Refugee Stay in Australia) குழு ஆராய்ந்து எடுக்கப்போகும் முடிவுகளைத் தொடர்ந்தே தாமும் ஆராயப் போவதாகக் கூறிக்கொண்டார்கள். இத்தகைய தாமதங்களினால் அகதிகள் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டி வந்தது.

இதனையிட்டுத் தமிழ் மக்கள் சார்பில், தமிழ்ப் பிரதிநிதிகள் அவுஸ்திரேலியா அரசுக்குப் பல்வேறு வழிகளில் எடுத்துணர்த்தி வந்தனர். இதன் விளைவாக 1986 ஏப்ரலில் குடிவரவு, தேசிய இனங்களுக்கான அமைச்சர் DORS குழுவிற்கு தமிழ் அகதிகள் விண்ணப்பங்களை அகதி அந்தஸ்து வழங்கலாமா, இல்லையா என்ற மதிப்பீடு செய்வதைக் கட்டுப்படுத்துமாறு பணித்தார்.

இவ்வுத்தரவு அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை DILGEA கவனிக்கும் என்றும், கருணை அடிப்படையிலான விண்ணப்பங்களை மறுபரிசீலனை செய்யும் என்ற நோக்கிலேயே இடப்பட்டதாக அவர்கள் கருதினர். இத்துடன் ஸ்ரீலங்காவிலிருந்து வருபவர்களின் விண்ணப்பங்கள் அனுதாபத்துடன் கையாளப்படப் போவதுடன் அவர்கள் நாட்டிற்குத் திரும்பும் பட்சத்தில் உயிர் ஆபத்திற்குள்ளாகக்கூடிய பயம், நாட்டில் வன்முறைகள் உண்டு என்பனவற்றை ஆதாரபூர்வமாக விளக்கும் பட்சத்தில் அவர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அமைச்சர் உத்தரவு பிறப்பித்தார். தமிழர்களது உயிருக்கு இலங்கையில் உத்தரவாதம் கிடையாது என்பது தற்பொழுது நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளிலிருந்து யாவரும் அறியக்கூடியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய அரசின் கொள்கையடிப்படையில் DORS குழு தஞ்ச விண்ணப்பங்களை மட்டும் பரிசீலனைக்குட்படுத்தி வந்தது. மனிதாபிமான ரீதியில் வதிவதற்கு அனுமதி கோரப்பட்ட விண்ணப்பங்கள் பிராந்திய அலுவலகங்களில் ஆராய்ந்து தீர்மானிக்கும்படி விடப்பட்டன. DILGEA அதிகாரிகளினால் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், பின்பு மனிதநேய விண்ணப்பங்களாக மாற்றியமைக்கக் கோரப்படும் பட்சத்தில், அவை இலகுவாக நிராகரிக்கப் படலாம் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர். மேலும், மனிதநேய அடிப்படையில் விண்ணப்பதாரரை நோக்குமிடத்து, விண்ணப்பதாரருக்குத் தனிப்பட்ட தொடர் துயரளிக்கப்பட்டிருக்கிறதா என்ற கேள்வியினடிப்படையிலேயே விண்ணப்பங்கள் தீர்மானிக்கப்பட்டன. உள்வரவுச் சட்டத்தின் 6A(1)e ப் பிரிவிலும் உள்வரவு அமைச்சின் பொதுக்கட்டளையில் கூறியபடி மனிதநேய, கருணை அடிப்படையின் மெய்க்கருத்து வடிவினை நோக்காத காரணத்தினால் பல விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

முதல் நிலையிலேயே விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதனால் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய தேவை விண்ணப்பதாரர்களுக்கு ஏற்பட்டு, மேலும் காலதாமதங்கள் தவிர்க்க முடியாதவையாகின.

இத்தகைய இடர்களை ஆராய்ந்து வந்த சமூகத் தாபனங்கள் தமது ஆய்வு முடிவில் DORS குழுவிடம் மேன்முறையீடு செய்வதைவிட உள்வரவுச் சட்டத்தின் 6A(1)e யின் அடிப்படையிலும், அதன் மறுசீராய்வு ஒழுங்குகள் அடிப்படையிலும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுதலே சிறந்த முறை எனக்கண்டு, எடுத்துக் கூறினர். இதன் பின்பு DORS குழுவினரிடம் உடனடி மீளாய்வுக்கு விண்ணப்பகாரர் செல்வதைத் தவிர்த்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நிலையில், 1989 டிசம்பர் 19இல் சீர்திருத்தப்பட்ட உள்வரவுச் சட்டம் வெளியாயிற்று. இது, ஏற்கனவே அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வரும் தமிழர்கள் நிரந்தரமாக வதிவதற்கான விண்ணப்பங்களை, டிசம்பர் 19ஆம் திகதிக்குள், திடமான மனிதாபிமான அடிப்படையில் காரணங் காட்டி விண்ணப்பம் செய்தல் வேண்டும் என்ற ஒரு எண்ணத்தைத் தோற்றுவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், குடிவரவு அமைச்சரின் செய்தி வெளியீடுகளும், **DILGEA** அலுவலர்கள் கூறிய கருத்துக்களும், சீர்படுத்தப்பட்ட உள்வரவுச் சட்டம், நாட்டு நிலையினைக் கணக்கில் எடுப்பதற்கான வழிவகைகளை உள்ளடக்கியிருப்பதனால், இலங்கையர் அவசர அவசரமாக விண்ணப்பங்களைத் தாக்கல் செய்யத் தேவையில்லை யென்றும், பிந்திப் பதிவதனால் அவர்களுக்கு எந்த ஆபத்துமில்லையென்றும் கூறிவந்தன. இப்படியான நம்பிக்கையூட்டும் செய்திகள், மனிதாபிமான முறையில் கணிக்கக்கூடிய நாடுகளில் இலங்கையும் ஒன்றாகக் கணிக்கப்படும் என்ற எண்ணத்தையும், இலங்கை இத்தகைய நாடுகளில் ஒன்றென அரசின் பணித்துறை ஏட்டில் அமைச்சரால் பதவு செய்யப்படும் என்ற நம்பிக்கையையும் ஊட்டியது. இந்நம்பிக்கையின் அடிப்படையில், தஞ்ச விண்ணப்பதாரர் பலர், முன்பு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர், தலைமறைவாய் வாழ்ந்து வருவோர் ஆகிய பலர் அரச கட்டளை 140இன் கீழ் விரிவுபடுத்தப்பட்ட தற்காலிக நுழைவுத் தகுதி அனுமதிக்கு டிசம்பர் 19ஆம் திகதிக்குப் பின் விண்ணப்பித்தனர். இத்துடன் இவ்விண்ணப்பங்களது பரிசீலனைக் கட்டணமான அவுஸ்திரேலிய டொலர் 240யையும் தொடர்ந்து கட்டி வந்தனர். அரசியல் பணித்துறை ஏடு வெளிவந்ததும், அதில் ஒரு நாடும் மனிதாபிமான ரீதியில் கணிக்கக்கூடிய நாடெனப் பதிவு செய்யப்படாதிருப்பதைக் கண்டு பலர் ஆச்சரியமும் ஏமாற்றமும் அடைந்தனர். ஆக, முன்பு 1991ஆம் ஆண்டில் சீனப் பிரஜைகளுக்கென அமுல்படுத்தப்பட்ட தற்காலிக அனுமதிச் சீட்டு அடிப்படையிலேயே இலங்கையருக்கும் தற்காலிக அனுமதிச் சீட்டுக் கட்டளை விதியமைந்திருப்பதைக் காணக் கூடியதாகவிருந்தது. இம்முறையை ஈழத் தமிழர்களும் அவுஸ்திரேலியாவில் தமது தங்குவதற்கான அனுமதி பெற உபயோகித்தனர். இத்தகைய அனுமதி ஆறுமாத காலத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டது. ஆனால் விண்ணப்பப் பரிசீலனை முடிவுபெற ஆறுமாதத்திற்கு மேல் செல்லும் என அறிந்த தமிழ் அகதிகள் கழகம், வழக்கறிஞர் போன்றோர் இதனால் தமிழர்கள் ஏதும் பயனை அடையப் போவதில்லை என எடுத்துக் கூறினர்.

1990 ஜூன் மாதம் அரச கட்டளை 140 ரத்துச் செய்யப்படவே இதனடிப்படையில் விண்ணப்பித்த தமிழர்களது விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்பட்டன. இத்தகைய விண்ணப்பங்களை எவ்வாறு அணுகுவது என்பதற்கும் பிராந்திய அலுவலகங்களிற்குமிடையே ஒருமித்த கருத்துக்களெதுவுங் காணப்படவில்லை. சில பிராந்திய அலுவலகங்கள் விண்ணப்பங்களை வாபஸ் செய்துவிட்டு, புதிய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என்றும், சில அப்படிச் செய்ய முடியாது எனவும் வாதிட்டன. விண்ணப்பங்களை எப்படி கையாழுவது என்ற இப்படியான ஒரு குழப்ப நிலை அலுவலர்கள் மத்தியில் இருந்தபோது, ஏற்கனவே உள்வரவுச் சட்டப்பிரிவு **6A(1)e**இன் கீழ் மனிதாபிமான அடிப்படையில் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படத் தொடங்கின. அதற்கு அவர்கள் கொடுத்த காரணம், விண்ணப்பதாரர் சரியான முறையில் தமக்கு நேரடியான தொடர் துயர்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டத் தவறியுள்ளனர் என்பதேயாகும்.

மீண்டும் இவர்கள் வதிவிட அனுமதியை ஒழுங்காக்குவதற்காக விண்ணப்பித்தபொழுது, மீண்டும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. அதற்கு உள்ளூராட்சிக் கட்டளைப் பிரிவு 37இன்படி ஏற்றுக்கொள்ள முடியாதவையென்றும், நாட்டிற்குள் சட்டவிரோதமாக நுழைந்து 12 மாதங்களுக்கு மேலாக இங்கு தங்கிவிட்டனரென்றும், ஏற்கனவே விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு விட்டன என்றுங் காரணங் கூறப்பட்டது. இதனால் தமிழர்கள் பலர் இன்று அவுஸ்திரேலியாவில் தலைமறைவாக வாழும் நிலை ஏற்பட்டு விட்டது.

தமது விண்ணப்பங்களுடன் சில புதிய தகவல்களைச் சேர்த்து, தாம் இன்றைய சூழலில் நாடு திரும்ப முடியாதிருப்பதைச் சுட்டிக்காட்டித் தமது விண்ணப்பங்களை மீளாய்வு செய்யும்படி கேட்டுப் பலர் தமிழ் அகதிக் குழுவினரைக் கேட்டுள்ளதாகவும், இதனையடுத்து, 1991ஆம் ஆண்டு பிற்பகுதியில் தமிழ் அகதிக் குழுவினர் உள்ளூராட்சி அமைச்சினை நாடியபோது, அரசு தாம் 1989ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதியிலிருந்து, உள்ளூராட்சிச் சட்டப் பிரிவு **6A(1)e** இன் அடிப்படையில் தீர்மானிக்கப் படாதிருக்கும் விண்ணப்பங்களைத் தீர்க்கு முகமாக ஒரு விசேட அதிகாரிகள் குழு(**Task Force)** ஒன்றினை உருவாக்கியிருப்பதாகவும், அவர்கள் துரிதமாகவும் சரியான முறையிலும் ஈழத்தமிழரது விண்ணப்பங்களைக் கணிப்பார்கள் என்றும் உத்தரவாதம் அளித்தார்களெனக் கூறப்படுகிறது.

தமிழ் அகதிக் குழுவினர்க்குக் கிடைத்த தகவல்களின்படி, 90 சதவீதமான முடிவெடுக்கப்படாத விண்ணப்பங்களை விசேட அதிகாரிகள் குழு பரிசீலிப்பதாகவும், பலருக்கு வசிப்பதற்கான உரிமைகள் கிடைத்து வருவதாயும் தெரிய வந்துள்ளது. இலங்கையிலிருந்து குடும்பங்கள் வந்து இணைவது தாமதமாவதற்குக் காரணம் அங்குள்ள அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்தில் ஏற்படும் தாமதமே என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து தெரிவதென்னவெனில் விசேட அதிகாரிகள் குழுவினரிடம் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டும் கைநூல் சரியான முறையில் உள்ளூராட்சிச் சட்டத்தின் **6A(1)e** இல் அடங்கியுள்ள பொருளாக்கத்தைப் புரிந்துகொள்ள உதவியிருப்பதாகவும், இப்புரிந்துணர்வு, விண்ணப்பங்களைச் சரியான முறையில் அணுக வைப்பதற்கும் அதனடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களால் தமிழர் பலருக்கு நல்ல முடிவுகள் கிடைத்த வண்ணமுள்ளன என அறியப்படுகிறது.

மேலும், அவுஸ்திரேலியத் தமிழ் அகதிக் கழகத்தினர் அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்து இதுவரை நிரந்தர வதிவிட அனுமதி கிடைக்காமல் இருப்பவர்களின் எதிர்காலம் தொடர்பாக **Immigration & Ethnic Affairs** அமைச்சர்சென்றற் **NICKBOLKS** அவர்களை 6-7-93இல் சந்தித்துக் கலந்துரையாடியபோது பின்வரும் விபரங்கள் வெளிவந்தன.

இலங்கையிலிருந்து 1989ஆம் ஆண்டிற்கு முன்பு வந்தவர்களின் நலன்கள் குறித்தே தற்சமயம் ஆராயப்படுவதாகவும் - அதே நிலைமையிலேயே சுமார் 22,000 சீனர்கள் இங்கிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இலங்கையில் இனப்பிரச்சினை விவகாரத்திற்கு நிரந்தர தீர்வு இன்னமும் கிட்டாத நிலைமையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தம் தொடரும் அதேவேளையில் தென்னிலங்கையில் குறிப்பாக கொழும்பு மாநகர் புறங்களில் தேடுதல் வேட்டை என்ற பெயரில் அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்படுவதும் - இச்சந்திப்பில் கழகத்தின் சார்பில் வலியுறுத்தித்தப்பட்டது.

இலங்கையின் சமகால நிலமைகளை தாங்கள் மிகுந்த அனுதாபத்துடன் அவதானிப்பதாகவும் - அங்கு திரும்பிச் செல்ல முடியாமல் இருப்பவர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக தாம் திறைசேரியிலிருந்து நிதி உதவியை எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் **NICKBOLKS** தெரிவித்துள்ளார்.

மேலும், கழகம் 21-5-93இல் - குடிவரவு அமைச்சரின் பிரதம ஆலோசகரும் அமைச்சு அதிகாரியுமான திரு.டேவிட் ரிச்சட்சனுடன் நடத்திய சந்திப்புக் குறித்தும் தூதுக் குழுவினர் அமைச்சரிடம் பிரஸ்தாபித்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்த குடும்பங்கள் - மீண்டும் தாயகம் திரும்புவதில் ஏற்படக்கூடிய இடர்பாடுகள் - மனோவியல் ரீதியாக எதிர்நோக்கும் துன்பங்கள் குறித்தும் இச்சந்திப்பில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இந்த நிலமைகளை ஆழ்ந்த கவனத்துடன் செவிமடுத்த அமைச்சர், இப்பிரச்சினைகள் தொடர்பாக இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்பதாக சரியான முடிவை அரசாங்கம் எடுக்குமென்று உத்தரவாதம் அளித்துள்ளார் என அறியப்படுகிறது.

மேலும், இச்சந்திப்பின்போது அவுஸ்திரேலிய தமிழர் அகதிக் கழகத்தினர் விடுத்த வேண்டுகோளில் இடம்பெற்ற பிரதான விடயங்கள்:

1. இலங்கையில் மனிதாபிமானமுள்ள நடைமுறைத் தீர்வு ஒன்று ஏற்படும்வரை தமிழர்களுக்கான வதிவிட அனுமதியை நீடிப்பதுடன் தற்பொழுது அமுலில் இருக்கும் சட்டங்கள் உதவியுடன் அவர்களுக்கு நிரந்தர வதிவிட அனுமதியை வழங்கல்.

2. இலங்கையர்க்கான வதிவிட அனுமதியை நீடிக்கும் வேளையில் தற்பொழுது அவுஸ்திரேலியாவில் வாழுகின்ற சகல தமிழர்க்கும் தற்காலிக அனுமதி கிடைக்க வழி செய்தல்.

3. ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் சட்டவிரோத நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாது இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு மீண்டும் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பமளித்தல்.

நியூசவுத் வேல்ஸ், விக்டோரியா போன்றவிடங்களிற்கிடையே பெரும்பான்மையான விண்ணப்பதாரிகள் காணப்படுவதனால், ஏனைய பிராந்திய அலுவலகங்களில் இருக்கும் விண்ணப்பங்களை இங்கு மாற்றினால் விசேட அதிகாரிகள் குழு இறுதி முடிவை எடுப்பது சுலபமாகவிருக்கும்.

மேற்படி பிரிவுகளுள் அடங்கும் விண்ணப்பதாரர்களுள் அநேகர் 1985ஆம் ஆண்டுகளில் விண்ணப்பித்தவர்கள். இவர்களில் பலர் தங்கள் குடும்பத்தவர்களைப் பிரிந்து நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றனர். இன்று இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருக்கும் சூழ்நிலையில் அங்கு சென்று குடும்பத்தினருடன் மீண்டும் இணைந்து வாழ முடியாதவர்களாகவிருக்கின்றனர். அவர்கட்கு இலங்கையின் ஏனைய பகுதிகளில் நிம்மதியான வாழ்வு வாழக் கூடிய இடமொன்றைத் தெரிந்தெடுத்துக் கொடுக்க முடியாத சூழ்நிலையிலே இருக்கிறார்கள்.

4. ஏற்கனவே இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் உறவினர், நண்பர்கள் போன்ற தமிழர்களுடன் நீண்டகால உறவை வளர்த்திருக்கிறார்கள். அத்தகைய தமிழர்கள் விண்ணப்பதாரிகள் திருப்பியனுப்பப்படும் பட்சத்தில் நிகழக் கூடிய ஆபத்தைப்பற்றி கவலையடைந்துள்ளனர். இத்தமிழர் சமூகம் இவர்கள் பராமரிப்பில் காட்டிவரும் அக்கறையைக் காரியாலயங்கள் மதித்துத் தனிப்பட்ட விண்ணப்பங்களைப் பரிசீலிக்கையில் கிழக்குத் தீமோர், முன்னாள் யூகோஸ்லேவியா, பர்மா, சூடான் பிரஜைகளின் விடயத்தில் காட்டிய அணுகு முறையைத் தமிழர்கட்கும் காட்ட வேண்டும்.

5. அனேகமான விண்ணப்பங்கள் முற்றிலும் மனிதநேயப் பார்வைக்குத் தகுதியானவையாகும். சகலராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமான தீர்வு கிடைக்காதவிடத்திற்கு இவர்கள் திரும்பிச் செல்ல நிர்ப்பந்திக்கப்படலாகாது. தற்பொழுது அமுலில் இருக்கும் 115ஆவது பிரிவுச் சட்டம் கடுமையானதாகவுள்ளதால் அதனைத் தமிழர்களின் விசேட தேவைகட்கு இசைவான வகையில் இலகுவாக்க வேண்டும். இரண்டு வருடத்திற்கு மேலாக இவர்களது விண்ணப்பங்கள் முடிவெடுக்கப்படாமல் இருப்பதனால் இவர்கள் அதிக கஷ்டங்களுக்குள்ளாக்கப்பட்டு வருவதுடன் இது ஒரு நியாய மற்ற விடயமாகும்.

6. இலங்கையில் தமிழ் மக்களது பாரம்பரியத் தாயகத்தில், அவர்களது மனித உரிமைகள் முழுமையாகப் பேணக் கூடிய வழிகளில், ஒரு சமத்துவமான பிரஜை என்ற வகையில் வாழக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் வரையில், அவுஸ்திரேலியா வாழும் தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படவோ, அல்லது அத்தகைய நெருக்கடிகளையோ எதிர்நோக்க மாட்டார்கள் என உறுதிப்படுத்த வேண்டும். □

# நூற்சேர்க்கைப் பட்டி

SHR 3203
Sivarajah, N
Nutritional Survey of Children in the Jaffna District: A Preliminary Report
Jaffna: Faculty of Medicine; 1993
17p
பொருள்: சிறுவர்கள்/போசாக்கின்மை/யாழ்ப்பாண மாவட்டம்

SHR 3202
Workshop on Identification of Rehabilitation Programmes for Unsupported Women; NGOs Project
Jaffna: Council of NGOs, Jaffna; 20 May 1993
42p

பொருள்: பெண்கள்/புனர்வாழ்வு/இலங்கைத் தமிழர்கள்

SHR 3212
Information Note on UNHCR Position Concerning Sri Lankan Asylum Seekers in Europe and North America.
Geneva: UNHCR; 16 June 1993
2p
பொருள்: புனர்வாழ்வு/இலங்கைத் தமிழர்கள்/அகதிகள்/ஐரோப்பா/அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையாளர்

SHR 3214
Hasbullah, Shahul Hameed.
Devolution and Muslim aspirations of Sri Lanka:
Paper presented at the Conference on the Promotion of Peace in Sri Lanka.
Canada: April 1993
பொருள்: முஸ்லிம்கள்/சமாதான முயற்சி/வடக்கு, கிழக்கு மாகாணங்கள்/புள்ளி விபரங்கள்/குடித்தொகை/வரைபடங்கள்

SGN 348
Economic & Social Statistics of Sri Lanka 1991
Colombo: Central Bank of Sri Lanka; 1992
108p
பொருள்: புள்ளி விபரம்/இலங்கை

SGN 353
Europe Tamil's Sixteenth Literary Conference Souvenir: Collection of Articles Submitted in the Conference and other articles
Netherlands: A AA IE; August 1993
74p
பொருள்: கட்டுரைகள்/தமிழ் இலக்கியம்/நாடகம்/பெண்கள்

□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லண்டன்
சர்வதேசத் திரைப்பட விழா
(நவம்பர் 4 - 21, 1993)

## கிரிஷ் கர்னாட்டின்
# பூப்பூக்கும் மரம்

யமுனா ராஜேந்திரன்




கிரிஷ் கர்னாட், உலகெங்கும் போற்றப்படும் இந்தியத் திரைப்பட இயக்குநர், நாடகாசிரியர், நடிகர். கர்நாடகாவைச் சார்ந்தவர். மஹாராஷ்டிரத்தில் பிறந்தவர். கன்னடத்தில் எழுதுகிறவர். அவரது **பூப்பூக்கும் மரம்** (செல்வி) உலகத் தரம் வாய்ந்த திரைப்படம். நவம்பர் 1993இல் நிகழ்ந்த லண்டன் சர்வதேசத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட திரைப்படம் பூப்பூக்கும் மரம். லண்டன் திரைப்பட விழாவிற்கு வருகை தந்தார் கிரிஷ் கர்னாட். நாடக நெறியாளர் பாலேந்திராவும், ஓவியர் கிருஷ்ணராஜாவும், நானும் அவரை இரு முறை சந்தித்துப் பேசினோம்.

1938ஆம் ஆண்டு பிறந்தவர் கிரிஷ். கணிதமும் புள்ளியியலும் கர்நாடகா பல்கலைக்கழகத்தில் பயின்றார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தத்துவத்தில் முதுகலை மாணிப் பட்டம் பெற்றார். தத்துவத்தோடு, அரசியலும் பொருளியலும் படித்தார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவராயிருந்தார். சென்னையை மையமாகக் கொண்டு இயங்கிய ஒக்ஸ்போர்ட் யூனிவர்சிட்டி பிரஸ் அலுவலகத்தில் முகாமையாளராகவும், பின்னர் பதிப்பாசிரியராகவும் (Editor) பணிபுரிந்தார். 1968இல் ஜவர்ஹலால் நேரு அரசாங்கத்தை விமர்சனம் செய்து எழுதிய, **துக்ளக்** எனும் அவரது இரண்டாவது நாடகத்தின் மூலம் பிரபலமானார். 1970ஆம் ஆண்டு **ஸம்ஸ்காரா** (இறுதிக் கிரியைகள்) படத்தை எழுதினார்; நடித்தார். இவர் இணைந்து இயக்கிய முதல் படம் **வம்சவிருக்ஷா** (பரம்பரை மரம்). இதற்காக சிறந்த இயக்குநருக்கான தேசிய விருது பெற்றார்.

காடு இவர் தனித்து உருவாக்கிய படம். கன்னட புதிய அலை சினிமாவின் முன்னோடியானவர். புனா திரைப்பட, தொலைக்காட்சி நிறுவனத்தின் இயக்குநராக இரு வருடங்கள் பணியாற்றினார். ஸியாம் பெனகல், பாஸீ சட்டர்ஜி, சத்யஜித் ராய், ஜாபர் பட்டேல், மிருணாள் சென் போன்றவர்களோடு இணைந்து செயல் பட்டார். அவர்கள் படங்களில் நடித்தார். **நிசாந்த்** படமும் **சுபா** படமும், இவரின் அற்புதமான நடிப்புக்குச் சான்றுகள்.

இவரது நாடகங்களும் திரைப்படங்களும் பெரும்பாலும் கன்னட மொழியிலேயே எழுதப்பட்டவை. வரலாறும், புராணக் கதைகளும், கிராமிய நாடோடிக் கதைகளும் இவருக்கு மிக விருப்பமான படைப்பு ஆதாரங்கள். இவர் படைப்புகள் பெரும்பாலும், இவை சார்ந்தே உருவாகியிருக்கின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளாகச் சங்கீத நாடக அகடமியின் தலைவராகப் பொறுப்பு வகித்தார்.

இவர் நெஞ்சுரம் வாய்ந்த, ஆளுமை மிகுந்த கலைஞன். தயவு தாட்சண்யமின்றி, மனசாட்சிக்கு நேர்மையாக அரசியலையும், சமூக அமைப்பின் அடக்குமுறைத் தன்மையையும் விமர்சிப்பவர். இவரின் அணுகுமுறையில், மிகத் தெளிவான மார்க்சியப் பகுப்பாய்வுத் தன்மையை, என்னால் இனம்காண முடிகிறது.

திரைப்படத்தைக் காட்டிலும் நாடகத்தில் அதிக ஆர்வம் கொண்டிருக்கிறார். இவரது துக்ளக், பலிபீடம் போன்ற நாடகங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. இவரது புகழ்மிக்க இரு பிற நாடகங்கள் **ஹயவதனா** மற்றும் **நாகமண்டல**. நாகமண்டல நாடகம், ஒரு தமிழ்க் கிராமிய நாடோடிக் கதையை அடிப்படையாகக் கொண்டது என்று குறிப்பிடுகிறார்.

இவரது துக்ளக் நாடகம், நாடக நெறியாளர் பாலேந்திராவினால் இலங்கையில் மேடையேற்றப்பட்டிருக்கிறது. அரசின் தணிக்கைக் கட்டுப்பாடுகளைக் கடந்து, மிகச் சிரமங்களுக்கிடையில் மேடையேற்றப்பட்டிருக்கிறது. இந்நாடகம், அதிகார அமைப்பை எள்ளி நகையாடும் நாடகம். இதைப் பற்றி விரிவாகப் பேசக்கூடியவர் பாலேந்திராதான்.

கிரிஷ், பழகுவதற்கும் விவாதிப்பதற்கும் எளிமையானவர்; இனிமையானவர். தம் கருத்து நிலைபாட்டில் தீவிரத்தன்மையும் தெளிவும் கொண்டவர்.

திரைப்பட விழாவில் காண்பிக்கப்பட்ட பூப்பூக்கும் மரம் ஒரு கன்னடக் கிராமிய நாடோடிக் கதையை அடிப்படையாகக் கொண்டு உருவானது. பெண்கள் சமையலறைகளில், தெருக்களில் சந்திக்கும்போது செவிவழி பரவிய கதை. பெண்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சொன்ன கதை. எமது சமூகங்களில் பெண்களின் நிலைபற்றிய கதை. பெண்களின் பார்வையில் புராணிகத் தன்மையுடன் சொல்லப்பட்ட கதை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதை இதுதான்:

ஒரு கிராமம். உயர்ந்த மரங்களைக் கொண்ட அடர்ந்த வனம். நம்மைச் சுற்றிலும் பசுமை. பசும் புற்கள். பசுமையான படர்ந்த கொடிகள். பசுமையான மரத்தில் தொங்கும் ஊஞ்சல். பசுமையான மரத்தில் தொங்கும் விழுதுகளைப் பிடித்து ஆடும் சிறுவர், சிறுமியர். ஈர மண் வாசம் நம் நாசியைத் தாக்கி, சந்தோஷமூட்டுகிறது.

ஒரு ஏழைத்தாய் காட்டுக்குள் வசிக்கிறார். அவருக்கு அழகான இரு இளம் பெண்கள். ஜீவனத்திற்கே கஷ்டப்படுகிறவர்கள். ஏழ்மை அவர்கள் முகங்களிலும் அவர்கள் வதியும் வீடுகளிலும் குடியேறியிருக்கிறது. அக்கிராமத்தில் ஒரு நிலச்சுவாந்தார் குடும்பம். பெரிய வீடு. வீட்டுக்கு முன் பெரிய மரம். அகன்ற திடல். கட்டம் தாண்டி சில்லு விளையாட்டு விளையாடச் சௌகரியமான பரந்த வெளி.

சூரிய வெளிச்சம் விழும் நடுக்கூடம். சதுரமாய், தூண்கள் நிறைந்த வீடு. வீட்டுக்குள்ளேயே குளிப்பதற்கான சிறு குளம், படித்துறை. கல் மண்டபம். அவ்வீட்டில் ஒரு வாலிபன்; மணவயதில் இருப்பவன். அவனது விடலைத் தங்கை; பொறுப்புகளற்ற குறும்புக்காரச் சிணுங்கி. தந்தை, மனைவி இறந்தபின் வைப்பாட்டி வீட்டிலேயே பெரும்பாலும் தங்கும் நிலச்சுவாந்தார். வாலிபனுக்கு அக்கா; வீட்டின் மூத்த பெண்; அனைவரையும் அனுசரித்துப் போகின்றவள். கொஞ்ச நாட்கள் தனது வீட்டில் தங்கிவிட்டுப் போவதற்காக அவள் வந்திருக்கிறாள். வசதியான இடத்தில் வாழ்க்கைப் பட்டவள்.

ஏழைத் தாயின் இளைய மகள் செல்விதான் பூப் பூக்கும் மரம். அவள் ஒரு அபூர்வ பிறவி. நல்ல தெளிந்த நீரை செப்புக் குடத்தில் மொண்டு, அவள் கை கட்டிய நிலையில் அவள் மீது ஊற்ற, அவள் பூப்பூக்கும் மரமாக மலர்வாள். வெள்ளையும் சிவப்பும் கலந்த கொத்துக் கொத்துப் பூக்கள். பூக்கிளைகள். இந்தப் பூமிக்குள் எங்குமே அனுபவிக்க முடியாத வாசம். தெய்வீக வாசம் அந்தப் பூக்கள். அந்த மரம் மிகமிக மென்மையானது. அந்த மரத்திற்கு எந்தச் சேதாரமும் நிகழ்ந்துவிடக் கூடாது. பூக்களை மட்டும் வேண்டியளவு பறிக்கலாம். பிற்பாடு, மறுபடி ஒரு குடம் தண்ணீர் பூ மரத்தின்மீது ஊற்ற, அவள் மீண்டும் மனிதப் பிறவியாகத் திரும்புவாள்.

அந்தப் பூக்களை நிலச்சுவான் வீட்டிற்கு எடுத்து வந்து செல்வியும் அவள் அக்காவும் விற்கிறார்கள். அவர்கள் ஜீவனம் தொடர்கிறது.

இந்தப் பூக்களின் அபூர்வமான வாசனை நிலச்சுவான் மகனுக்கு ஒரு ஆச்சரியம். இதற்காகவே செல்வியை மணந்து கொள்கிறான் அவன். முதலில் மறுக்கும் அவள் மிகுந்த மன்றாடுதலின் பின் அவனுக்காக, அவனுக்காக மட்டும் மிக இரகசியமாகப் பூப்பூக்கிறாள். இதைச் சாவித்துவாரத்தின் மூலம் பார்க்கும் விடலைத் தங்கை, தான் தற்கொலை செய்து கொள்வதாக அண்ணியைப் பயமுறுத்தி, பூப்பூக்கும் மரமாக மாறநிர்ப்பந்திக்கிறாள்.



அந்தச் சோகம், அந்தத் துர்ப்பாக்கியம் நிகழ்ந்து விடுகிறது. செல்வியின் மீது தண்ணீர் ஊற்றப்படுகிறது. பூப்பூக்கும் மரமாக மாறுகிறாள் செல்வி. விடலைத் தங்கையின் விளையாட்டுத் தோழிகள் சிறுவர்கள் எச்சரிக்கையையும் மீறி மரத்தின் மீதேறி கிளையை ஒடிக்கிறார்கள். பூக்களைப் பிய்த்து எறிகிறார்கள். மரத்தைப் பற்றி உலுக்குகிறார்கள். நம் நெஞ்சு வெடிக்கிறது இக் காட்சியில். மீண்டும் தண்ணீர் ஊற்றப்படுகிறது.

கால் கை முடமாய் முழு மரமும் மரப்பட்டை மூடிய மரஜடமாய், மனித முகத்துடன் செல்வியின் சோர்ந்த வெளிறிய வரண்ட உதட்டுடன் ஒரு உருவம் எஞ்சுகிறது. விடலைத் தங்கை உட்பட எல்லோரும் ஓடிப் போகிறார்கள்.

காட்டுக்கு வரும் ஒரு விறகுவெட்டி தீனக்குரலின் முனகலைக் கேட்டு அந்த ஜட உருவத்தை, உயிருள்ள மரத்தை வீட்டுக்கு எடுத்துப் போகிறான். இரவு முழுக்க வைத்திருந்து மறுநாள் தன் கிராமத்து ஜமீந்தார் வீட்டு வாசலில் போட்டு விடுகிறான்.

அந்த வேறு கிராமத்து ஜமீந்தார் வீடு, செல்வி கணவனின் அக்கா வீடு.

அக்காவிற்குச் செல்வியை அடையாளம் தெரிகிறது. ஆயினும் அது செல்வியல்ல. உயிருள்ள மரம். அந்த மரம் ஒரு இருண்ட அறைக்குள் பூட்டி வைக்கப்படுகிறது. இடையில் தன் மனைவியைக் காணாது மனம் பேதலித்து ஊரூராக அலைந்து அதே கிராமத்தின் குளக்கரையில் விழுந்து கிடக்கிறான் ஜமீந்தார் மகன். ஜமீன் மகனை அக்கா வீட்டில் கொண்டு வந்து போடு கிறார்கள். அவனுக்குக் குளிப்பாட்டி முகம் மழித்து, வாசனைப் புகையூட்டி பட்டுடுத்தி நகையலங்காரம் செய்து அறைக்கு அனுப்புகிறாள் அக்கா. நாட்டியம் தெரிந்த பெண்ணை, பாடத் தெரிந்த பெண்ணை ஒவ்வொருவராக அவன் அறைக்கு அனுப்புகிறாள் அக்கா. பூப்பூக்கும் மரமாக மாறாத எந்தப் பெண்ணையும் அவன் ஏற்கத் தயாராயில்லை. அவனுக்குச் செல்விதான் வேண்டும்.

அந்த வீட்டு வேலைக்காரியின் யோசனையின்படி உயிருள்ள மரத்திற்கு குளிப்பாட்டி முகம் துடைத்துப் பொட்டிட்டு, சேலை கட்டி, நகை போட்டு ஜமீன் மகன் பார்வையில் படும் படி திண்ணைத் தூண்மீது வைக்கப்படுகிறது.

ஒரு மரம். மரத்தின் மேடை. அங்கிருந்து செல்விக்கும் தனக்குமே சம்பந்தமான ஒரு பாடலை மனமுருகப் பாடுகிறான் செல்வியின் கணவன். பாடலைக் கேட்டு உயிருள்ள மரம் விம்முகிறது. அவன் கையில் சொட்டுச் சொட்டாக விழுகிறது கண்ணீர்த் துளிகள்.

செல்வி! அவன் செல்வியைக் கண்டு விட்டான். செல்வியை மறுபடி மனுஷியாக்க முடியும். ஒடிந்த கிளைகளையும் பூக்களையும் திரட்டி முதலில் மரத்தில் இருந்தபடி பொருத்திக் குடத்தில் தண்ணீர் வார்த்தால், செல்வி மறுபடி மனுஷியாகி விடுவாள். எத்துணை சந்தோஷம்.

உயிருள்ள மரத்தை வண்டியில் போட்டுக்கொண்டு ஜல்ஜல்லென வேகமாக சாட்டையைச் சொடுக்கியபடி கிராமத்துப் பக்கப் பசுமைப் பாதைகளினூடே இரட்டை மாட்டு வண்டியில் செல்கிறான். வழி முழுக்க கனவுகளை அள்ளி அள்ளி வைக்கிறான். செல்வியின் நம்பிக்கையான முகம். எத்தனை சந்தோஷம் அந்தக் காட்சிகள்!

வண்டியை நிறுத்திவிட்டுக் காட்டுக்குள் போகிறான்.

மனிதக் குரல்கள். அதட்டும் அதிகாரக் குரல். சட சடவென மரங்கள் வேரோடு சாய்ந்து விழும் நாராசம். வரண்டு உதிர்ந்த இலைகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரசர சத்தம். நொறுங்கல். கும்பலாக வீசிப்போடப்பட்ட மரக்கிளைகள். பொடிப் பொடியாக வெட்டி வீசப்பட்ட மரக் கொம்புகள். காய்ந்த பூக்கள். மரத் துண்டுகள். அது நிலச்சுவானின் சொந்த நிலம். முழு நிலமும் அவருடையதுதான். அந்த நிலத் தில் வெட்டிய மரங்களைக் கொண்டு அழகான மாளிகை அவனுக்காகக் கட்டப் போவதாகச் சொல்கிறார் தந்தை. அவன் மறுமணம் செய்துகொள்ள வேண்டும் என்கிறார். வீட்டுக்கு முன்னும் வீட்டைச் சுற்றிலும் அழகான தோட்டம் போடலாம் என்கிறார். மறுபடி பூச்செடி வைக்கலாம் என் கிறார்.

வாலிபன் தேடுகிறான். இந்த நொறுங்கல்களில் இந்த மரக் கூட்டத்தில், இந்த மரத் துண்டுகளில், இந்த ஓடிந்து சிதறிய கிளைகளில் எது என் செல்வியின் கிளை, எது என் செல்வியின் பூ, எது என் செல்வியின் வேர்?

சோகத்தில் நெஞ்சைப் பிழிந்து விடுகிறது இக்காட்சிகள். மனசின் அடியாழத்திலிருந்து நெக்குருகிப் பீறிட்டு வருகிறது கண்ணீர்.

அவன் திரும்ப வண்டிக்கு வருகிறான். ஏதும் பேசவில்லை. செல்வியின் சோர்ந்த எதிர்பார்த்த வெளுத்த முகம். ஆடும் மர உடல். அவன் சொல்வது இதுதான்: "மறுபடி வீடுகள் வரும். மறுபடி பசுமையும் வரும். ஆனால் சந்தோஷம் இருக்காது. துக்கம் துயரம்தான் இருக்கும்".

வண்டி நகர்கிறது; செல்வியின் உயிருள்ள மர உடலுடன் வண்டி நகர்கிறது.....

படம் முடிவடைந்ததற்கான தொடக்கமாக கலைஞர்களின் பெயர்கள் திரையில் கீழிருந்து மேலெழுகிறது.....

இந்தக் கதை திரைப்பட விழாவில் காண்பிக்கப்பட்டபோது இரு வேறு விதங்களில் விளங்கிக்கொள்ளப்பட்டது.

மேற்கத்தியர்கள் இது சூழலியல் பிரக்ஞையை ஊட்டும் அற்புதமான சோகமான படம் என்று உணர்கிறார்கள்.

எமது புரிதலின் யதார்த்தம் இதனிலும் வேறானது. எமது புராணிகத்தன்மை சமகாலத்தன்மையைக் கொண்டிருக்கிறது. எமது சமூகங்களில் பெண்களின் நிலைபற்றிய ஒரு நிலைத்த/தத்துவச் சித்திரத்தை இது முன்வைக்கிறது. அதே காலகட்டத்தில் சமகாலத்தின் மிகப்பெரிய பிரச்சினையான, ஜீவாதாரமான காடுகள் அழிப்பு எனும் சூழலியல் பிரச்சினையையும் முன்வைக்கிறது.

இந்தியாவில் 85 சதவீதமான காடுகள் அழிக்கப்பட்டு விட்டன என்கிறார் கிரிஷ். எமது தத்துவ நோக்கில் மரமும் உயிருள்ளதுதான். அது வேறுவகையாகக் கையாளப்பட்டால் மனிதப் பேரழிவுதான் நிகழும். பெண்ணும் அத்தகையவள்தான். அவள் ஆன்மீக உலகம் வேறுவகைகளில் கையாளப்பட்டாலும் பேரழிவுதான். இதுதான் எமது கிராமிய நாடோடிக் கதைகளின் ஜீவன். புராணிகத்தன்மை. சமகாலத்தன்மை.

மேற்கத்தியத் தெய்வீகக் கதைகளில் (Fairy Tales) இத்தகைய சமகாலத்தன்மை இல்லை என்கிறார் கிரிஷ். மேற்கின் கதை சொர்க்கத்தில் நிகழ்பவை. எம் கதைகள் மண்ணில் நிகழ்பவை என்கிறார்.

சமீபத்தில் காலமான நாடோடிக் கதையாளர்/இந்திய ஆங்கிலக் கவி ஏ.கே.ராமானுஜன் பெண்கள் மற்றும் பூப் பூத்தல் பற்றிக் குறிப்பிடுவதை இங்கு சுட்டிக் காட்டுகிறார் கிரிஷ்.

(Flowering), 'பூப்பூத்தல்', 'மாதவிலக்கு குருதி' (Menstruation) என்னும் இரு வார்த்தைகளும் கன்னடத்திலும் சமஸ்கிருதத்திலும் ஒரே வார்த்தைதான்/அர்த்தம் தான் என்கிறார் ராமானுஜன்.

நான் கிரிஷிடம் திரும்பத் திரும்பச் சொன்னேன்: இது 'இந்தியப் படம்' என்று. ஆம் இது அகலமான இந்தியப் படம். கிழக்கத்திய தத்துவ மரபைக் கொண்ட படம். மேற்கின் லெளகீகப் பார்வையினால் சீரழிந்து போகாத வளமை கொண்டது, சாரம் கொண்டது எம் வாழ்வும் தத்துவமும். எமது வாழ்வு இயற்கையுடன் ஜீவாதாரமான உறவு கொள்ள வேண்டும் எனும் தத்துவ மரபு கொண்டது. கல்லுக்கும் உயிரும் மூக்கும் ஆபரணமும் தரும் மரபு கொண்டது. இயற்கையைத் தன்னுள் வாங்கி தான் நதியில் கலக்கும் மரபு எம் மரபு, எம் உயிருள்ள கனவுதான் எம் மரபு.

கிரிஷும் செல்வியும் பூப்பூக்கும் மரமும் எம்மரபின் அசைக்க முடியாத உயிருள்ள சாட்சிகள்.

குறிப்புகள்:

செல்வி/பூப்பூக்கும் மரம் (The Flowering Tree) 1992ஆம் ஆண்டு இந்தியத் தொலைக் காட்சிக்காகத் தயாரிக்கப்பட்ட படம். இந்தி மொழியில் எடுக்கப்பட்டது. 102 நிமிடப் படம். உலகின் பெரும்பாலான சர்வதேசத் திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டது. பாரிசில் நிகழும் மூன்றாம் உலகப் பட விழாவிலும் திரையிடப்படவுள்ளது.

படம் பற்றிய தொடர்பு முகவரி:
Sadir Media Pvt Ltd.
14/13 Second Main Road
Jayanagar Bangalore 560082,
Karnataka , India



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சு. விசாகன்



# தமிழ்க் கலாசார உருவாக்கத்தில் கிருபானந்தவாரியாரின் பங்களிப்பு

நவம்பர் 7ஆம் திகதி லண்டனிலிருந்து பம்பாய் வழியாகத் தமிழ்நாடு சென்று கொண்டிருக்கையில், விமானத்தில் தனது 87ஆவது வயதில், வாரியார் காலமானார். ஏறத்தாழ 40 வருட காலத்துக்கும் மேலாகத் தமிழ்நாட்டிலும், கடல் கடந்து தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் பல நாடுகளிலும் வாரியாரின் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன. தமிழர்கள் வாழும் சகல பகுதிகளிலும் காலத்திற்குக் காலம் பலராலும் சமயச் சொற்பொழிவுகள் வழங்கப்பட்டிருந்தாலும், வாரியார் சொற்பொழிவுகள் தனக்கேயுரித்தான பல தகுதிகளையடக்கிய முத்திரையைப் பெற்றிருந்தன. நற்போதனைகள், சமய விளக்கங்கள் போன்றவற்றை சகலருக்கும் புரியக்கூடிய அழகு தமிழில், இராக ஆலாபனை, நல்ல இசை போன்றவற்றுடன் கலந்து நகைச்சுவையுடன் வழங்குவதில் வாரியார் சிறப்புத் தேர்ச்சியினைக் கொண்டிருந்தார் எனக் கூறலாம்.

தமிழ்நாட்டில் நாயன்மார்களது பக்தி இயக்கம் முடிவடைந்ததும், இந்து சமயமானது மிகச் சிறிய வசதி படைத்தவரும், கற்றவர்களுமாகிய ஒரு வைதீகக் குழுவினருக்குப் புரியக்கூடிய மதமாக இருந்து வரலாயிற்று. பெரும்பான்மையான தமிழ்நாட்டவர் இயற்கை வழிபாட்டுடன், கிராமியச் சிறு தெய்வங்களையும் குல தெய்வங்களையுமே வணங்கி வந்தனர். கட்டடக் கலையிலும், சிற்பத்துறையிலும் சர்வதேசமே வியந்து பார்க்கும் கோவில்களைக் கொண்டிருந்த தமிழ்நாட்டில், பாமர மக்களுக்கு அக்கோவில்களின் பின்னணி என்ன, இந்து மதம் அவை பற்றியளிக்கும் விளக்கங்கள் என்ன, என்பன புரியாது சம்பிராயத்துக்காக மட்டும் வணங்குவது கடமை எனும் தலைவிதியே காணப்பட்டது. தத்துவார்த்த விளக்கங்களும், அவைபற்றிய விவாதங்களும் உயர்குழாத்தைச் சேர்ந்தவர்களிடையே மட்டுமே நிலவிவந்தன.

வெகுஜன மட்டத்திற்கு எட்டாத கனியாக இருந்த மேற்படி அறிவைப் பொதுமக்களுக்குரித்தான மொழியிலே, நகைச்சுவையுடன் வழங்கிப் பணிபுரிந்ததனாலேயே அவர் தமிழ் மக்களின் கலாச்சாரத்தில் ஓர் நிரந்தர இடத்தைப் பிடித்துக் கொண்டார். மேற்தட்டு வர்க்கத்தினரிடையே இருந்துவந்த கவிதையைப் பாரதியாரும், வசன நடையிலக்கியத்தை புதுமைப்பித்தனும் இலகு தமிழில் சாதாரண பொது மக்களின் மொழியில் எழுதி, எப்படி மக்கள் கவிதை, மக்கள் வசனநடை இலக்கியம் என்பவற்றை தோற்றுவித்தார்களோ, அதேபோல் ஆன்மீகச் சொற்பொழிவுகளை பொதுமக்கள் மட்டத்திற்கு கொண்டுசென்று இலகு கதாப் பிரசங்கம் எனும் இன்னொரு இலக்கிய வடிவத்தை சாதாரண பொதுமக்களுக்கு வழங்கும் முறையை வாரியார் அவர்கள் புதிதாக உருவாக்கிக் கொடுத்தார் என்றால் மிகையாகாது.

இலங்கை போன்று இந்தியாவில் சமயம் ஒரு கட்டாய பாடமாக பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதில்லை. இதனால் பாமர மக்கள் மத்தியில் கிராம மட்ட அதியற்புத கதைகளும், பயத்தினைத் தோற்றுவிக்கும் பேய் சம்பந்தமான கட்டுக்கதைகளுமே நிலவி வந்தன. இவற்றினைப் பாவித்து வைதீக மரபுக் கோட்பாட்டினர் பொதுமக்களைச் சுரண்டியும், பாரபட்சமாக நடத்தியும், உயர் அந்தஸ்துகளை தாம் மட்டும் அனுபவிக்கும் போக்கினையும் கொண்டிருந்த காலத்திலே, அதன் தர்க்க ரீதியான விளைவாக "பகுத்தறிவுப் பாசறை" எனும் சீர்திருத்த இயக்கம் திராவிடக் கழகத்தினால் தோற்றுவிக்கப்பட்டது. இவர்களது பிரச்சாரங்களுக்கும், கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் கேள்விக் கணைகளுக்கும் வைதீக மரபுக் கொள்கையினர் ஈடு கொடுக்க முடியாது திண்டாடினர். திராவிடக் கழகத்தின் தந்தை பெரியார் கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்கள் முற்போக்கானவை என்று கூறியதுடன், ஒரு கட்டத்தில் பாதிக்கப்பட்ட சகல தமிழர்களும் முஸ்லிம்களாக மாறிவிடுங்கள் எனவும் கோரிக்கை விட்டார். இக்கால கட்டத்திலேயே வாரியாரின் சமயச் சொற்பொழிவுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. ஒரு புறத்தில் இந்துமதக் கருத்துக்கள் மக்கள் மத்தியில் போய்ச்சேர உதவியதுடன், அடம் பிடித்துக் கொண்டிருந்த வைதீக மரபினர் தமது பாரபட்சக் கொள்கைகளைக் கைவிட்டு ஓர் இணக்கமான போக்கை ஏற்படுத்தாவிடின், சமுகத்தில் ஏற்படப் போகும் அனர்த்தங்களையும் இடித்துரைக்கத் தவறவில்லை. இவ்வாறாக தமிழ்நாட்டின் சமூக அமைப்பில் புதிய சீர்திருத்தங்கள் ஏற்பட திராவிடக் கழகம், கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்கள் ஆற்றிய பணிகளுடன் வாரியாரின் பங்களிப்பும் இடம் பெற்றதாலேயே, ஒரு வகையான சமரச நிலைக்கு வரச் சகல தரப்பினரும் தள்ளப்பட்டனர்.

இன்றைய உலகில் பெரும்பாலான பகுதிகளில் தமிழ் மொழியைப் பேசும் இந்து மதத்தவர்கள் பரந்து வாழ்கின்றனர். இஸ்லாமியர் மெக்காவையும், கத்தோலிக்க மக்கள் வத்திக்கானையும் தமது சமய கலாசார தாயகமாகவும், அங் நாடுகளிலிருந்து அம்மக்கள் வாழும் பல்வேறு நாடுகளுக்கு விஜயங்களை மேற்கொள்ளும் அருட் போதகர்களின் போதனைகளால் மேற்படி சமயத்தினர் புத்துணர்வு பெற்று சமயம், கலாசாரம் போன்றவைகள் சீர்குலைந்து போகாது பேணப்படுவதையும் அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மேற்படி கருத்து உலகில் வாழும் தமிழர்கள் மத்தியில் தமிழ்நாடு பற்றி நிலவி வருவதுடன், தமிழ்நாட்டில் இருந்து விஜயங்களை மேற்கொள்ளும் அருட் போதகர்கள், கலைஞர்கள் போன்றவர்களுக்கு இருந்து வருகிறது. இத்தகைய சமய அருட் போதகர்களுள் நீண்ட காலமாக முக்கிய இடத்தைப் பிடித்து இருந்தவர் வாரியார் அவர்களாகும்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்னை இட்ட தீ

விமர்சனம்:
டாக்டர் கே.சி. ராஜசிங்கம்

இந்நாடகம் ஈழத்தின் இன்றைய நிகழ்வுகளை மையமாகக் கொண்டு 'குழந்தை' சண்முகலிங்கத்தினால் எழுதப்பட்டு அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில் மேடையேற்றப்பட்டது. பலராலும் மிகுந்த பாராட்டைப் பெற்ற இந்நாடகம், தமிழ் ஈழத்தின் இன்றைய பொருளாதார பிரச்சினையின் மத்தியில் கிடைக்கும் குறைந்த பட்ச வசதிகளைக் கொண்டு சிறப்பாகத் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை ஆட்சியாளர்களினால் ஏற்படும் இன்னல்களை மையமாகக் கொண்டு சமூகத்தின் ஒவ்வோர் மட்டத்திலும் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களை இந்நாடகம், வெகுவாகச் சித்தரித்துள்ளது.

இந்நாடகத்தின் வீடியோப் பிரதியினைப் பெற விரும்புவோர், இந்நாடகத்தினைத் தயாரிப்பதற்கும் வீடியோப் பிரதியாக்கம் செய்யவும் ஏற்பட்ட செலவினை ஈடு செய்யும் வகையில், பிரதியொன்றுக்கு £10.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பிரதி தேவைப்படுவோர், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

*Dr.V.NERMINATHAN*
*Medical Institute of Tamils, Thamil House, 720 Romford Road, London E12 6BT*

## எழுத்தாளரும் தயாரிப்பாளருமான குழந்தை சண்முகலிங்கம்

1931இல் பிறந்த இவர் 'குழந்தை' என்ற புனைபெயரில் நாடகங்களை எழுதியும், இயக்கியும் வருகிறார். எனினும் நாடகம் எழுதுதலைப் பிரதான மாகக் கொண்டுள்ளார். 1977 இல் நாடகத் துறையில் 'டிப்ளோமா' பட்டம் பெற்ற இவர், யாழ்ப்பாணத்தில் நாடகத்தை ஓர் கற்கைக்குரிய நெறியாகப் பரவச் செய்வதற்காய் நாடக அரங்கக் கல்லூரி என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்தார்.

1979இல் இவரது 'கூடி விளையாடு பாப்பா' என்ற சிறுவர் அரங்கு மிகவும் பிரபல்யம் அடைந்தது. இதுவே ஈழத் தமிழரிடையே தோற்றம் பெற்ற முதலாவது சிறுவர் அரங்காகும். 1980இல் ஈழத் தமிழரிடையே சமூகப் பிரச்சினைகள் தீவிரமடைந்தபோது, சமூக முரண்பாடுகளை வெளிக்கொணரும் வகையில் நாடகங்கள் உருப் பெற்றன.

இவரது 'மண் சுமந்த மேனியர்' ஈழத் தமிழரிடையே முக்கியத்துவம் பெற்ற ஒரு சமூக நாடகமாகும். இது ஒரு சனரஞ்சக அரங்காக நிலவியது. 1990களில் இவரது 'அன்னை இட்ட தீ' வெளிவந்துள்ளது. இது தமிழ் மக்கள் படும் உளவியல் அவலங்கள் பற்றிய பிரக்ஞை (Awareness)ஐ ஏற்படுத்தி வருகிறது.

**பொ**துவாக இந்நாடகமானது போரின் பல்வேறு வகையான நெருக்கீடு நிலைகளையும், அதனால் ஏற்படும் தாக்கங்களையும் பிரதிபலிக்கும் அதேவேளை இவற்றினால் குடும்ப தனிமனித மட்டத்தில் ஏற்படக்கூடிய உளவியல் ரீதியான தாக்கங்களையும் மிகச் சிறந்த முறையில் வெளிப்படுத்தியுள்ளது. எழுத்தாளரின் இம்முயற்சியானது காலத்தோடு பிணைவுற்ற ஓர் வெளியீடாகும். இந் நாடகம் மேடையேற்றப்படும்போது பிரச்சினைகளின் உளவியல் ரீதியான பரிமாணங்களை வெளிப்படுத்தும் வகையில் அரங்கேற்றப்படுதல் அத்தியாவசியமானதாகும். நாடகத்தின் கதை மாந்தர்கள் உயிரோட்டம் வாய்ந்தவர்களாகவும் நன்கு பரிட்சயமான ஆளுமை வகைகளுடன் ஒன்றித்தவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர். இந் நாடகத்தில் பிரதிபலித்துக் காட்டப்படும் கதாபாத்திரங்களின் குணங்குறிகளின் உருவாக்கமும் குறிப்பான முறையீடுகளும் யுத்த நிலைமையின் போது தோன்றும் உளவியல் மனநோய் சார்ந்தவையாக உள்ளன. நாடகத்தின் போக்குடன் ஒருங்கிணைந்த வகையில் உளவியக்கச் செயற் பாடுகளும் அவற்றிற்கான தீர்வு முறைகளும் பற்றிய கருத்துக்கள் வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். உளமறி நாடகம் என்ற வகையில், பொதுப் பிரச்சினைகள் மேடையில் வெளிப்படுத்தப்படும்பொழுது, பார்வையாளர்களின் சொந்த ஒடுக்கப்பட்ட உணர்வுகளிலும் விளிப்பினை ஏற்படுத்தி நாடகத்தின் பாத்திரங்களினூடாக செயல்படுத்தி, உளவியல் பிணைப்புகளிலிருந்து விடுவிப்பதற்கு உதவும்.


நாடகத்தை அரங்கேற்றும் பொழுது உதவியாக சிலவகையான உளவியல்சார் குறிப்புகளை சுட்டிக் காட்டலாம். பெரும்பாலான எமது உளச் செயல்பாடுகள் நனவிலி மனதில் (உணர்வற்ற பகுதியில்) செயற்படுவதன் காரணமாக பாதிக்கப்பட்டவரில் நனவு மனத்தினால் சாதாரணமாக இவற்றை வெளிப்படுத்த முடியாது. எனவே "நான் இதைச் சொல்லி ஆறுதலடைவேன்" என பாதிப்படைந்தவர் வெளிப்படுவதைவிட, இவ்வாறான செயல்பாடுகளைப் பாதிக்கப்பட்டவருடன் உடனிருக்கும் ஒருவர் அவதானிப்பதுடன், நடக்கும் நடப்புகளையும் கருத்துடன் கிரகித்து வெளிப்படுத்தலாம். ஆனால் தமது மனநெருக்கடிகளையும், உணர்வுகளையும் ஒருவர் வெளியிடுவதன் மூலம் அவற்றிலிருந்து விடுதலையடையலாம் என்பது குறிப்பிடப்படலாம். "ஆ சொன்ன பிறகு ஆறுதலாக இருக்கிறது" போன்ற வாசகங்கள் வெளிப்படுத்தப்படுவதைவிட முகபாவனைகள் உடல் மொழி என்பவற்றினால் வெளிப்படுத்தப்படுவது கூடப் பொருத்தமானதாக அமையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாவது உளவியல் நாடகம் என்ற காரணத்தால் பல்வேறு வகையான உளவியல் கருத்துக்களை நேரடியாகவும் வெளிப்படையாகவும் தெளிவுபடுத்த வேண்டிய நிர்ப்பந்தம் எழுகின்றது. இவ்வாறான தத்துவார்த்தங்களைப் பார்வையாளர்கள் தாமே ஊகித்துக் கொள்ள வைக்கலாம் என்றால் மிகச் சிறப்பாக அமையும். பல்வேறு விதமான உளவியல் தாக்கங்களை வெளிப்படுத்தும் முயற்சியில் ஒரு குடும்பத்தின் எல்லா அங்கத்தவர்களும் உளப்பாதிப்பு நிலைக்கு அல்லது நோய்க்கு உள்ளாவது போன்ற தன்மை காணப்படுகிறது. இந்நாடகத்தில் ஒருவர் குறிப்பிடுவது போன்று தற்போதைய யுத்தத்தினால் எல்லோரும் ஏதோ ஒரு வகையான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றனர். ஆயினும் பொதுவாக ஓர் குடும்பத்தின் ஓரிருவர் மட்டுமே இவ்வாறான பாதிப்புக்களின் விளைவுகளை வெளிப்படுத்துவர். குடும்ப இயக்க செயல்பாடு முறையில் வழமையான உளவியல் ரீதியான எதிர்த் தாக்கங்கள் அக்குடும்பத்தின் ஓரிரண்டு பிரதிநிதிகள் அல்லது பெரும் பாதிப்புக்குள்ளானவர் மூலமாகவே வெளிப்படுத்துவது வழமையாகும். இந்நாடகத்தின் பாணியில் நேரமும், பாத்திரங்களும் ஓர் வரையறைக்குட்படுத்தப்பட்டிருப்பதனால் ஒரு குடும்பத்திலே பாதிப்புக்குள்ளான பல கதாபாத்திரங்கள் உருவாக்கப்படுவது தவிர்க்க முடியாததாகும்.



இந்நாடகமானது கல்வி கற்ற, மேல் மத்தியதர, பல்கலைக் கழகப் பார்வையாளர்களுக்காக எழுதப்பட்டது போன்ற தன்மை பிரதிபலிக்கின்றது. கதாபாத்திரங்கள் இந்த வகுப்பின் பிரதிநிதிகளாக விளங்குகின்றனர். எமது சமூக அமைப்பைப் பொறுத்தவரை இவ்வகையைச் சார்ந்தோரே உளவியல் கருத்தினைச் சார்ந்த நாடகமொன்றினால் கவரப்படத் தக்கவர்களாகவும், விளங்கிக்கொள்ளத் தக்கவராகவும் இருப்பினும், இம்மாதிரியான உளநோய்கள் இவ்வ குப்பைச் சார்ந்தவர்களை மட்டும் பாதிக்கலாம் என்ற தவறான கணிப்பிற்கு இடமுண்டு என்பதும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

*தவநாதன்:*

(அதிகார ஆளுமையின் மூலம் குடும்பத்தினையும், நண்பர்களையும் கட்டுப்படுத்தும் பாத்திரம்) முதிர்ந்த, பொறுப்பு வாய்ந்த ஓர் அரச அதிகாரி. யுத்த சூழலைத் தவிர்க்க முடியாத ஒன்றாக ஏற்றுக்கொண்டு தன்னை அச்சூழலுக்கு இசைவாக்கி பொருத்தப்படுத்திக் கொள்வதற்காக நியாயம் காட்டல், அறிவுமயப்படுத்தல் போன்ற உளத்தற்காப்பு செயற்பாடுகளைக் கையாளுகின்றார். அசாதாரண நெருக்கடியை சாதா ரணப்படுத்தி இவ்வகையான தன்மையினை ஏனையோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க் கின்றார். யுத்தத்தின் போக்கில் சகல நிகழ்வுகளும் சாதாரணம் என்பதனை மகனுக்கும் (பகீரதன்) உறவினருக்கும் விளக்குகின்றார். உணர்வுகளையும் காரணங்களையும் ஆழமாக நோக்குவதால் ஏற்படக்கூடிய மனக்குழப்பங்களுக்குப் பயந்து அவ்வாறான உள் நோக்கங்களுக்கு எதிர்ப்புக் காட்டும் சுபாவம் இவர் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. மற்றவர்கள் குழப்பமான கேள்விகள் கேட்டாலோ, தனக்குக் கீழ்படிய மறுத்தாலோ சிடுசிடுப்பானதும், கோவிக்கும் தன்மையும் இவரில் தோன்றுகிறது. மேலெழுந்தவாரியாக விடயங்களைச் சிந்திப் பதனாலும், அதன்படி நடப்பதனாலும் உண்மையான ஆழமான உணர்வுகள் மனதுள் அடக்கப்படுகின்றன. இவ் வாறு ஒரு சம்பவத்தின் முழு அர்த்தத்தையும் தாக்கத்தையும் மறுப்பதால், உள் தள்ளப்பட்ட நெருக்கீடுகளும், பிரச்சினைகளும் மெய்ப்பாட்டு நோய்கள் (குடற் புண்), சிடுசிடுப்புத் தன்மை போன்றவையாக வடிகால் பெற்று வெளிப்படுகிறன.

*புனிதவதி:*

மனச்சாட்சியும், கடமையுணர்வும் நிரம்பிய தாய். மகனின் இறப்பினை மறுப்பு நிலையில் எதிர்கொள்கிறார். மன மகிழ்வற்ற நினைவுகள், உணர்வுகள் என்பவற்றை மறைத்து ஆறுதல் பெற சமய சடங்காசாரங்களைக் கையாள்கின்றார். மகனின் இறப்புப் பற்றிய நனவிலிமன அறிவினையும், உண்மை நிலையினை முகம் கொடுக்க இயலாமையும், இவ் வகையான கண்டிதமான செயற்பாடுகளால் வெளிப்படுத்துகின்றார்.

*பார்த்திபன்:*

காதலுக்கும், குடும்ப முரண்பாட்டுச் சிக்கல்களுக்கும் இடையே அகப்பட்டுத் தவிக்கும் அசல் பல்கலைக்கழக மாணவன். பிற்கால வாழ்வில் சமூகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொறுப்புள்ள பங்கினை ஏற்றுக்கொள்வதனால் உயிரை இழக்கின்றார். அபாயகரமான யுத்த சூழலில் தலைமைத் துவத்தினை முன்னின்று செயற்படுத்தியதனால் இவருக்கு ஏற்பட்ட கதி இன்றைய யுத்த சூழலில் இவ்வகைப் பங்கினை ஏற்றுப் பாதிப்படைந்த பலவேறு மாந்தரைப் பிரதிபலித்துக் காட்டுவதாக அமைகின்றது. இதனால்தான் அநேகமானோர் இவ்வகைச் சந்தர்ப்பங்களில் விதியின்மேல் பழியினைச் சுமத்தி விலகிக் கொள்கின்றனர்.

*பகீரதன்:*

ஒழுக்கமான மாணவன். நெருக்கீடுக்குப் பிற்பட்ட மன வடு நோயினால் அவதியுறும் பாத்திரமாக அமைகிறான். உலங்குவானூர்தியின் சூட்டிற்கும், இளைஞன் ஒருவனுக்கு ஏற்பட்ட மரணத்தினை நேரடியாகக் கண்டதனால் தான் அனுபவித்தவைகள் மனதில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. இதன் விளைவாக இவ்வகை நினைவுகளை நினைவுறுத்தும் தூண்டல்களும், சம்பவங்களும் இவரில் முன் ஏற்பட்டவாறு ஓர் பயந்த பதற்றமான தன்மையினை உருவாக்குகின்றது. தீர்வு காணப்படாத நெருக்கீடுக்குப் பிற் பட்ட மனவடு நிலையானது மெய்ப்படுத்தல் மூலம் தலையிடி, ஊன்றக் கவனம் செலுத்துவதில் இடர்ப்பாடு, கற்றலில் சிக்கல் போன்ற குணங்குறிகளாக வெளிப்படுத்துகின்றன. மனத்தாக்கத்திற்கான அனுபவத்தினை இவர் மீண்டும் படிப்படியாக ஜீரணித்து ஏற்க வேண்டியது தேவையாகின்றது.

*குருமூர்த்தி:*

உளநரம்பு ஆளுமை (பயந்த சுபாவம்) கொண்ட ஓர் புத்தி ஜீவி. கருத்து ரீதியாகப் பிரச்சினைகளைப் பகுப்பாயவும், வினாப்படுத்தவும் முடிகின்ற அதேவேளை வாழ்வின் நிஜ மான நிலைகளில் அவற்றினை நடைமுறையில் எதிர்கொள்ள முடியாமையினை வெளிப்படுத்தும் ஓர் கதாபாத்திரம். மித மான நெருக்கீடுகளுக்கு அளவுக்கதிகமான எதிர்த்தாக்கங்களை வெளிப்படுத்துகின்றார். உலங்குவானூர்திச் சத்தம், சூட் டுச் சத்தம் போன்றவை வெளிப்படையாகவே அபாயகரமான தன்மையற்ற நிலைகளிலும் அவற்றினால் கிலி கொண்டு பதுங்கிப் பாதுகாப்பு நாடுகின்றார். பதகளிப்பு நோய் நிலையினை வெளிப்படுத்துகின்றார். மனக்குழப்பமும் இய லாமையும் இலக்கு மாறி இல்லாளைப் பிழை பிடித்தல், தத்துவக் கருத்துக்களை கூறுவது போன்ற செயல்பாடுகளால் (உள இயக்க ரீதியாக) திசை திருப்பப்படுகிறது.

*கமலாம்பிகை:*

இந்த மண்ணின் உணர்வு பூர்வமான நடைமுறைத் தன்மை நிறைந்த பெண். மகிழ்ச்சியானதும், கருணை நிரம் பியதுமான தாய் ஆளுமையினை நம்முன் வெளிப்படுத்துகிறார். கொழும்பிலிருக்கும் மகனுடைய பிரிவால் துயருறுபவள். தாய்ப்பாசத்தினை "நிர்மலன் மேல்" திசை திருப்பி இலக்கு மாறிய (பதில்) செயற்பாடாக வெளிப்படுத்துகின்றாள். நெருக்கீடு நிலைகளில் தளம்பாமலும் ஏனையோர்க்கு உதவி யாகவும் இருப்பவள்.

*மங்கையற்கரசி:*

விதிவசத்தினால் மீண்டும் மீண்டும் பாதிப்புக்குள்ளாகிய துரதிர்ஷ்டவாசி. எல்லாவிதமான நெருக்கீடுகளையும் எதிர் கொள்ளும் நிலை தெளிவாகின்றது. அதேவேளை தாங்க முடியாத துன்ப நிலைகளின்போது அதன் இயலாமையினால் மனமுடைந்து போவதும் தெரிகின்றது. எமது கலாசாரத்தில் மரணச் சடங்கு நிகழ்வுகளின் குணமாக்கும் தன்மை இவர் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. யுத்த சூழலின் காரணமாக இவற்றைச் சரியாக நடைமுறுத்தப்படுத்த முடியாதபோது ஏற்படும் குற்ற மனப்பான்மையும், கழிவிரக்க நோய் நிலை யும் வெளிப்படுத்தப்படுகின்றன. பிள்ளையின் மரண நிகழ் வின்போது இசிவு கூட்டுப் பிரிவுநோய் நிலை வெளிப்ப டுத்தப்படுகின்றது.

*ஜானகி:*

ஏனையவர்களுக்காக வருந்துபவராகவும், தன்னை அர்ப்ப ணிப்பவராகவும் நடமாடும் கதாபாத்திரம். தன்னலமற்ற வாழ்வுக்கு ஓர் எடுத்துக்காட்டு. புரிந்துணர்வும், உதவி புரி யும் மனப்பான்மையும் இவரின் கதாபாத்திரம் மூலம் வெளிப்படுகின்றன. கணவனது இறப்பின் நிச்சயமற்ற தன் மையினால் மிகத் துன்பமும், வருந்தலும் அடைகின்றார். கணவனின் மரணத்தை இட்டுச் சந்தேகம், நம்பிக்கை இரண் டும் கலந்து இரு வேறு கூறுகளுக்கு இழுக்கின்றன.

*வாகீசன்:*

நன்றிக்கடன் நிறைந்த ஓர் வளர்ப்பு மகன். தனக்கு உதவி யவர்களுக்காகவும், தன்மேல் பாசமுள்ளவர்களுக்காகவும் எதனையும் செய்யத் தயாராக இருப்பவன். இவ்வகையான உதவிகள் பல இடர்கள் நிறைந்ததாயினும் அதனைச் செய் வதனைப் பொருட்படுத்துவதில்லை. சித்திரவதையின் கார ணமாக நெருக்கீடுக்குப் பிற்பட்ட மனவடு நோயின் மெய்ப் பாட்டுக் குணங்குறிகளை வெளிப்படுத்துகின்றார். ஆரம்பத்தில் சித்திரவதையினால் உண்டான நோய் காரணமாக திகைப் புக்கும், சமூகத்தில் இருந்து விலகியும் இருந்து பின் அத னால் தலைவிறைப்புப் போன்ற மெய்ப்பாட்டு அறிகுறிகளை வெளிப்படுத்துகின்றார். தனது கதையினை மீளச் சொல்வ தனாலும், நடந்தவற்றை பகிர்ந்து கொள்வதனாலும் நிம்மதி யுறுகின்றார்.

*கௌரி:*

நீண்ட நாள் துன்ப அனுபவங்களினால் துயருறும் ஓர் இளம் பெண். தனது அன்பிற்குப் பாத்திரமான சிநேகதியின் தற்கொலையும் அது சம்பந்தமான நினைவுகளும் மீண்டும் மீண்டும் அவள் மனதில் எழுகின்றன. அந்த அசம்பாவிதம் திரும்பத் திரும்ப நடப்பது போன்ற தன்மையில் செயல் படுகின்றார். "என்னைச் சுடுங்கள், இதனைச் செய்ய வேண் டாம்" போன்ற வாசகங்கள் இதைச் சுட்டிக் காட்டுகின் றன. தனது சிநேகிதி கற்பழிக்கப்படும்போது அவர் அதனை அவதானித்திருக்கலாம் அல்லது வேறொருவர் நடந்தவற்றை இவருக்குக் கூறியிருக்கலாம். இவரது நெருக் கீடுக்குப் பிற் பட்ட மனவடுநோய் நிலையானது அவசரமான சிகிச்சைக்குட் படுத்தப்பட வேண்டும். ஏனெனில் இவரது குணங்குறிகளில் ஆழமான குணமடையாத புரையோடிய தளும்பு வெளிப்படு கின்றது.

*நிர்மலன்:*

எல்லாம் தெரிந்த ஒரு மருத்துவ நிபுணரின் பாத்திரத்தை வெளிப்படுத்துகின்றார். ஒரு மருத்துவ மாணவனுக்கு இருக் கவேண்டிய வெளிப்படுத்தும் தன்மை, ஆலோசனை வழங் கல் என்பன இவரது பாத்திரத்தில் பொருத்தப்பாடாக வெளிப்படுத்தப்படுகின்றது. புரிந்துணர்வு, தேற்றல், ஆதரவு போன்ற இலக்கணங்கள் இவரில் விரைவிக் காணப்படுகின்றன. மிக நிஜத்தன்மை வாய்ந்த வெளிப்பாடு. நாடகத்தினுடைய மூலக்கரு அரங்கேற்றப்படும் முக்கிய பாத்திரம்.

*மோகன்:*

உருவாக்கப்பட்ட விடைகளை புலப்படுத்துவதனாலும், இலட்சியவாதத்தினாலும் வெளிப்படும் கதாபாத்திரம். நிகழ் கால அரசியல், சமூக விடயங்கள் பற்றிய தாக்கமான அறி வும், விழிப்புணர்வும் கொண்டவர். ஆனால் செயற்பாட்டில் சிறிது அனுபவ முதிர்ச்சியின்மையும், முழுமையற்ற தன்மை யும் வெளிப்படுகின்றன. □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(1913 - 1980)

# தனிநாயக அடிகளார் பணி தொடரட்டும்

பேராசிரியர் இ.பாலசுந்தரம்

தமிழ்த்தூது தனிநாயக அடிகளார் தமிழியல் வரலாற்றில் அறிவாலும் செயலாற்றலாலும் தன்னிகரற்று விளங்கியவர். உலக அறிவியல் அரங்கில் தமிழியல் ஆய்வை அறிமுகப் படுத்தி, தமிழ் ஆய்வுப் புலத்தை அகலச் செய்தவர். திருப்ப ணித் தொண்டராய், பல்கலைக்கழகப் பேராசிரியராய், நூலாசிரியராய், தமிழ் மொழி-பண்பாட்டுக் கழகங்களின் அமைப்பாளராய்-இயக்குநராய், சொற்பொழிவாளராய்- இவ்வாறு பல்வேறு நிலைகளில் நின்று தமிழ் மொழிக்கு அளப்பரிய பணிகள் ஆற்றிய பேரறிஞர், தனிநாயக அடி கள்.

ஈழத் திருநாட்டின் வடபால் நெடுந்தீவில் பிறந்த தனி நாயகம் அவர்கள், அறவழி ஓம்பி, தன்னை மதப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டார். உரோமாபுரியில் (1934-39) மதக் கல்வி பயின்று, பட்டம் பெற்று, முழுநேர மதத் தொண் டரானார். கிறிஸ்தவத் தொண்டில் ஈடுபட்ட அடிகளுக்குத் தமிழ் மொழி மீதிருந்த பற்றினாலும், ஆர்வத்தினாலும் தமிழாய்வில் ஈடுபடலானார். பழந்தமிழ் இலக்கியங்களில் இயற்கை பற் றியும், இயற்கையோடிணைந்த தமிழர் வாழ்வு பற்றியும் ஆய்வுக் கட்டுரை எழுதித் தமிழ் இலக்கியத்திலும் பட்டம் பெறலானார். அவரது ஆய்வேடு *Nature Poetry in Tamil* என்ற தலைப்பில், 1963இல் நூலாக வெளியாயிற்று.

தமிழ்நாட்டில் பணிபுரிந்த மேலைத்தேய கிறிஸ்தவ பாதி ரிமார்களாகிய கால்டுவெல், வீரமாமுனிவர், போப் முதலி யோர் தமிழின் தொன்மையையும் இலக்கிய மாண்பையும் உணர்ந்து, அதிலீடுபட்டுத் தமிழ்ப் பணி ஆற்றிச் சென்ற மையைத் தமிழியல் வரலாறு சான்று கூறுகின்றது. கிறிஸ் தவத் தமிழ்த் தொண்டர் வரிசையில் தனிநாயக அடிகள் மதப்பணியோடு, தமிழ்ப் பணிக்கும் தன்னைத் தற்கொடை செய்து, அனைத்துலகத் தமிழ் அறிஞர்களையும் அணி திர ளச் செய்த பெருமை பெற்றவர்.

ஓரினம் தன்மானத்துடனும், முழுமையான சுதந்திரத்துடனும் வாழ வேண்டுமாயின் அவ்வினத்தின் மொழி, இலக்கியம், பண்பாடு, இறைமை என்பன பேணப்பட வேண்டும். அவற் றைப் பேணிக் காக்க ஒரு அமைப்பு வேண்டும். அந்த வகை யில் உலகத் தமிழ் இனத்தின் பண்பாட்டைப் பேணும் நோக் குடன் ஒரு குரல் ஈழத்தவர் ஒருவரிடமிருந்து ஒலித்துச் செயல் வடிவம் பெற்றது. அதுவே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமாக மலர்ந்தது எனின் மிகையாகாது. அன்றியும் ஓரினத்தின் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் மேன்மையை உலக அறிவியல் அரங்கில் எடுத்துக் காட் டுவதற்கு 'நிறுவன அமைப்பு' மிக இன்றியமையாததாகும். இவ்வகையிலும் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் செயற் பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இக்கழகத்தின் தேவையையும், அதன் செயற்பாடுகளையும் நன்குணர்ந்த தனிநாயக அடிகள் அயராது உழைத்து 1964இல் இம்மன் றத்தைப் புதுடில்லியில் தொடக்கினார்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற சங்கப் பாடலின் ஓரடியைத் தமது மன்றத்தின் தலைமை வாசகமாகக் கொண்டார்.

திராவிட மொழிகளிலே தமிழ்மொழி தொன்மையும் இலக்கிய மேன்பாடும் கொண்டிருந்த போதிலும், அவை பற்றிய ஆய்வில் மேலைத்தேய மொழி-இலக்கிய ஆய்வா ளர்கள் தொடக்கத்தில் வேகமாக ஈடுபட்டாரில்லை. அதே வேளையில் அவர்கள் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சமஸ்கிருத மொழி பற்றியும், ஆரியப் பண்பாட்டின் தொன்மை பற்றியும் ஆராய்ந்து பெரிதாக வெளிப்படுத்தினர். தமிழ் ஆய்வும் திராவிடப் பண்பாட்டு ஆய்வும் உலக அரங்கில் ஏறாதிருந்தன. 'திரா விட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்'(1856) எழுதிய கால்டுவெல் ஐயரும், 1960களில் எமனோ பரோ முதலிய அறிஞர்களும் தமிழ் மொழியினதும், மற்றும் திராவிட மொழிகளினதும் தொன்மையையும், இந்தியப் பண்பாட்டில் அவை பெறும் முக்யத்துவத்தையும் ஆராய்ந்து நூலாக வெளியிட்டிருந்தார்கள். எனினும் உலகளாவிய நிலையில் தமிழியல் ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய ஒரு பின்னணியில்தான், தனிநாயக அடிகளார் உருவாக்கிய உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் முக்கியத்துவமும் உணரப் பட வேண்டும்.

நிறுவன அமைப்பு ஊடாகத் தமிழ்த் தொண்டில் நம்பிக் கைகொண்ட அடிகளார், தாம் தூத்துக்குடியில் வாழ்ந்த காலத்தில் 1947இல், 'தமிழ் இலக்கியக் கழகம்' அமைத்தார். இக்கழகம் 1952 முதலாக Tamil Culture என்னும் தமிழியல் ஆய்வேட்டை வெளியிட்டது. இவ்வாய்வேட்டின் மூலம் பன் னாட்டு அறிஞர்களும் தமிழியல் பற்றி எழுதவும், கருத்துப் பரிமாற்றம் செய்யவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# அகதிகளை இலங்கைக்குத் திருப்பியனுப்பலாமா?

**திரு. ஜோசப் பரராஜசிங்கம் பற்றி சில வார்த்தைகள்:**

இன்று இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும், அனுபவித்துவரும் இன்னல்கள் பற்றி இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் வேகமான பிரச்சாரத்தைச் செய்து பிரசசினைபற்றி பல ஆதார பூர்வமான தகவல்களையும் வெளிக் கொண்டு வருகிறார். சர்வதேச மனிதஉரிமை தாபனம் உட்படப் பலதரப்பட்ட அரசு சார்பற்ற நிறுவனங்கள், அரசாங்கங்கள், ஸ்தானிகராலயங்கள் போன்றவற்றின் நன் மதிப்பையும் பெற்றவர். ஆங்கிலத்தில் சபையில் சிறப்பாக உரையாற்றக் கூடியவர்களுள் இவரும் ஒருவர்.

அரசு–சார்பற்ற நிறுவன அதிகாரிகள் மத்தியில் மட்டுநகர் பாராளுமன்ற உறுப்பினர் இலண்டனில் ஆற்றிய உரையின் சாராம்சம்.

.(படத்தில் திரு. பரராஜசிங்கத்துடன், தமிழ் தகவல் நடுவ இயக்குநர் சபையின் தலைவர் திரு. சிவஞானம்.)



கடந்த மாதம் (12–11–93) பிரித்தானிய அகதிகள் நிலையத்தில், இலங்கை தொடர்பான அகதிகள் நலனில் ஈடுபாடுடைய நிறுவன அதிகாரிகள் மத்தியில் மேற்படி கூட்டம், தமிழ் தகவல் நடுவத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுச் சிறப்பாக நடந்தேறியது.

கூட்டத்தை ஒழுங்கு செய்து உண்மை நிலையைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துக் கூற சந்தர்ப்பம் அளித்த தமிழ் தகவல் நடுவத்தினருக்கு நன்றி கூறிவிட்டு திரு.பரராஜசிங்கம் பின்வருமாறு பேச்சை ஆரம்பித்தார். இன்றைய கூட்டத்தில், என்னை இலங்கையில் வந்து சந்திக்கும் தெரிந்த முகங்களில் சிலரும் வந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. திரு. மல்கம் றோஜார்ஸ், குவேக்கர் பீஸ்ஸைச் சேர்ந்த ராமமூர்த்தி, செப்டம்பர் 23ஆம் திகதியன்று இலங்கைப் பாராளுமன்றத்திற்கு திருமதி பாலசிங்கம் வந்திருந்தார் எனக்கூறி பெரும் சர்ச்சைக்குள்ளான பெண்மணி லிஸ் பிலிப்ஸன்ஸ்.

இப்பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு முன்பு அண்மைக் காலத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற மாற்றங்கள் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். இந்தியாவில் இருந்து திரும்புகின்ற அகதிகளின் நலனைக் கவனிக்கப் போவதாக வாக்குறுதியளித்து செயல் புரிந்து வந்த UNHCR எனும் ஐ.நா.அகதிகளுக்கான ஸ்தாபனம் அகதி முகாம்களின் பாதுகாப்புப் பிரச்சினை, தமது ஊழியர்கள் பணிசெய்ய முடியாத திண்டாட்ட நிலை என இரு காரணங்களைக் காட்டி முகாம்களிலிருந்து வெளியேறி விட்டனர். அடுத்து பூநகரி முகாம் தாக்கப்பட்டதற்குப் பதிலடியாக யாழ். மாவட்டத்தில் குடிமக்கள் வாழும் பிர தேசங்களில் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழர்கட்கெதிரான வன்முறைக்கான பதட்டநிலை தோன்றியிருக்கிறது.

இன்று இலங்கையில் நடந்துகொண்டிருக்கும் யுத்தம் மனிதவளம், பொருளாதாரம் அரசியல் ரீதியாக மிகச் செலவான ஒரு விரயமானதாகும். இலங்கையின் மொத்த வருவாயில் 40%ஆன பணம் போர்ச் செலவுக்குப் போகிறது. கடந்த 10வருடங்களில் மொத்தமாக 60,000 பேர் கொல்லப்பட்டுள்ளதாகக் கணக்கு விபரம் கூறுகிறது. ஆறு இலட்சம் பேர்வரை குடிபெயர்ந்துள்ளனர், இதில் 90%ஆனோர் தமிழர்களாகும். இத்தொகை ஒரு சிறுபான்மை இனத்திற்கு பெரிய தொகையாகும்.

இலங்கைக் குடியரசின் அரசியல் சாசனத்தில் தாம் விரும்பிய பிரதேசங்களுக்கு சுயவிருப்பில் சென்று தங்கும் உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து குண்டுவீச்சு, உணவு, மருந்துத் தட்டுப்பாடு, பரீட்சை எடுப்பதற்கு, வெளிநாட்டில் இருந்து வரும் பணத்தை மாற்றித் திரும்புதல், பென்சன் அலுவல்கள், நேர்முகப் பரீட்சை என்ற நோக்கங்களுக்காகக் கொழும்பு வந்து தனியார் வீடுகள், விடுதிகள், ஹோட்டல்கள் போன்றவற்றில் தங்கியிருக்கும் தமிழ் மக்கள் பெரிய இன்னல்களை தினமும் எதிர்நோக்குகிறார்கள். ஜனாதிபதியவர்கள் பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சிகளில் தமிழ் மக்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நிம்மதியாக வாழ்ந்து வருவதாக அடிக்கடி பிரச்சாரம் செய்து வருகிறார். ஆனால் நான் இப்பிரச்சாரத்தை ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இப்பகுதிகளில் வாழும் சகல தமிழர்களையும் அவர்கள் இலங்கைப் பிரஜை என்ற போதிலும், ஓர் சட்ட விரோதக் குடிமகனாகச் சந்தேகிக்கப்படும் போக்கே நடைமுறையில் காணப்படுகிறது. இவர்கள் வைத்திருக்கும், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளைக்கூட பாதுகாப்புப் படையினர் அலட்சியம் செய்தே வருகின்றனர்.

இங்கு வந்து தங்கியுள்ளவர்கள் கைதாகும் பொழுது சிங்களம் தெரியாதவிடத்து அதிக சிக்கல்களை எதிர் நோக்குகிறார்கள். அதிகாலை 1 மணிக்கும் 5 மணிக்கும் இடையில், திடீரென நிகழும் படையினர் சுற்றிவளைப்பில் தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டுச் சிங்களவர் மத்தியில் அவமானத்திற்கும் கேலிக்கும் உள்ளாக்கப்பட்டு மந்தைகளைப் போல வாகனங்களுக்குள் ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்படுகின்றனர். அரச, தனியார் வாகனங்கள், ஓட்டோ ரிக்ஷா, ரக்சி போன்றவற்றில் பயணம் செய்துகொண்டிருக்கையிலும் இவர்கள் மீது திடீர்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவமானப்படுத்தப்படும், கேலி செய்யப்படும் சம்பவங்களும் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அரசாங்க அறிமுக அட்டை களையோ, தாங்கள் கொழும்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்திருக்கும் காரணங்களை விளக்கும் அரசாங்கக் கடிதங் களையோ படையினர் அலட்சியம் செய்தே வருகின்றனர்.

தினமும் கலக்கமடைந்த நிலையில் பதட்ட வாழ்க்கையையே ஒவ்வொரு தமிழ் மகனும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறான். நள்ளிரவில் கதவு தட்டப்படும் பயப்பிராந்தி சகல தமிழர் களிடமும் நிலவி வருகிறது.

17ஆம் 18ஆம் பிரிவுகளைப்போல கொடிய அடக்குமுறைச் சட்டங்களை, கொடிய சட்டங்களுக்கும் அடக்கு முறைக ளுக்கும் பெயர்போன பிலிப்பைன்ஸ் நாட்டிலும் காண முடியாது. கட்டுநாயக விமான நிலையத்திலிருந்து குடிவரவு, விமான நிலைய பாதுகாப்பாளார் பரிசோதனை முதலியவற் றையெல்லாம் முடித்துவிட்டு வழிதிரும்புகையிலும் பாதுகாப்புப் படையினர் தமிழர்களை விட்டு வைப்பதில்லை.

நவம்பர் மாதம் 10ஆம் திகதியில் வெளியிடப்பட்ட Hindu ('இந்து') நாளிதழில் கொழும்பிலும், இலங்கையின் தெற்குப் பகுதிகளிலும் வாழும் இலங்கைத் தமிழர்கள் படும் இன்னல்கள் நன்கு வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன. இப் பகுதிகட்கு வருவோரைப் பதிவு செய்தல் முன்போல் அல் லாது படையினரிடம் மட்டுமே விட்டுவைக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப் போனால் தங்களால் உடனே பதிவு செய்ய முடியாது, அதற்கான விண்ணப்பப் படிவங்கள் முடிந்து விட் டன போன்ற பதில்களுடன் தமிழர்கள் சில சமயங்களில் திருப்பியனுப்பப்பட்டுள்ளார்கள். இவ்வாறு பதிவு செய்யப் படாமல் திருப்பியனுப்பப்பட்டால் தமிழர்கள் எதிர்நோக்கும் ஆபத்து அதுபோல் வேறு ஒன்றுமில்லை எனலாம்.

அண்மையில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய தமிழ் அங்கத்தவர்களுடன் பிரதமர் உட்பட, இரா ணுத் தளபதி, பொலிஸ்மா அதிபர், பாதுகாப்புப் படை உயர் ஆணையாளர் ஆகியோர் கலந்துரையாண்ட மகா நாட்டில், நள்ளிரவில் கைது, கைதானவர்கள் தடுத்து வைத் திருக்கும் இடம் உறவினர்க்குத் தெரியாது இருத்தல் போன்ற பல பிரச்சினைகள்பற்றி எடுத்துக் கூறினோம். சர்வதேச நாடுகளின் வற்புறுத்தல், சர்வதேச மன்னிப்புச் சபையின் கோரிக்கை போன் றவைகளை முன்வைத்து அவ சரகாலசட்ட விதியின் 15ஆவது சரத்தை நீக்கி பாதுகாப்புப் படையினரின் அதிகாரங்களைத் தாம் கட்டுப்படுத்துவதாக மகாநாட்டில் வாக்குறுதியளிக்கப்பட்டது. இதற்குப் பின்பு கைதாவோர் பற்றிய விபரங் களையும், கைதுக்கான காரணத்தையும், திகதியையும் உடனே தாம் பெற்றோருக்கோ உறவினர்க்கோ அறிவிக்கப் போவதாக வாக்குறுதியளித்தனர். ஆனால் கடந்த வாரம் 5,000க்கும் மேற்பட்டோர் கொழும் பில் சுற்றி வளைக்கப்பட்டு, பலர் தடுத்து வைக்கப்பட் டுள்ளனர்.

பாதுகாப்பு ஆலோசனைக் கமிட்டியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுள் நானும் ஒருவன். கைதானவர் பற்றி என்னிடம் பெற்றாரோ உறவினரோ முறையிடுகையில், நான் பொலிசாருடன் தொடர்பு கொண்டால் தமக்கு உள வுப் பிரிவின் தகவல் வரும்வரை காத்திருப்பதாக முதலில் கூறுவர், பின்பு கைதானவர்க்கும் புலிகளுக்கும் தொடர்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறி தொடர்ந்து தடுத்து வைத்திருப்பார்கள். அரசாங்க அறிக்கையின்படி இதுவரை 2,500 பேர்வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளாதாகக் கூறப்படுகிறது. ஆனால் இதைவிட 1,700 பேர் தடுத்து வைத்திருக்கப்படும் விபரம் எனக்குத் தெரியும். இவர்களுள் 960 நபர்கள் மீது கடந்த மூன்று வருடங்களாக எதுவித விசாரணையும் எடுக்கப்படாது மகசீன், வெலிக்கடை, களுத்துறைச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜூலை மாதத்தில் இதுபற்றிப் பாராளுமன்றத்தில் நான் கேட்டபோது சட்டமா அதிபர் ஒவ்வொருவர் பற்றி யும் தனித்தனி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க கமிட்டி நியமித்திருப்பதாகவும் விரைவில் நிரபராதிகள் விடுவிக்கப் படுவர் எனவும் உறுதி வழங்கப்பட்டு 3 மாதத்திற்கு மேலாகியும் இதுவரை ஒரு வரும் விடுதலையடையவில்லை.

ஜனாதிபதியை மிகுந்த சிரமத்தின் மத்தியில் நேரடியாகச் சந்தித்து உரையாடுகையில், தாம் கைது செய்தவர்களை விடுவித்து விட்டதாகப் படையினர் கூறினாலும் பலர் வீடு திரும்பவில்லை என்பதையும் எடுத்துக் கூறி இறந்தவர்களின் விபரங்களையும், அவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை யாதல் தந்தால் அவர்களில் தங்கியிருப்பவர்களுக்கு ஏதா வது நிவாரணம் கிடைக்கும் எனக் கூறியபோது, ஜனாதிபதி அவர்கள் திருவாளர் பரராஜசிங்கம் "தயவு செய்து இதை மட்டும் என்னிடம் கேட்காதீர்கள், இது என்னால் முடியாத காரியம்" என்றும், தாம் இப்படிச் செய்தால் முன்பு ஜனாதிபதியாக இருந்தவர் காலத்தில் இறந்த ஜே.வி.பி.யினரும் இதனைக் கேட்பார்கள். எனது நிலை தர்மசங்கடமாகி விடும் என்றார். நான் அவர்கள் பெற்றோர் நிலைபற்றி எடுத்துக் கூற, தன்னால் முடிந்ததை மட்டும் செய்ய முற்படு வதாகக் கூறினார். ஆனால் நான் மீண்டும் நாடு திரும்பி னால் மட்டுமே என்ன முன்னேற்றம் நடந்துள்ளது என்று கூறலாம்.

அடுத்து நான் கனடா சென்றிருந்தபொழுதும், இங்கு வந்தபொழுதும் இலங்கை அரசாங்கத்தின் மனிதஉரிமைப் போக்கில் பல முன்னேற்றங்கள் நிகழ்ந்திருப்பதாக வெளிநாட் டவர் என்னிடம் கூறினர். இதனை எந்த ஆதாரத்துடன் இவர்கள் கூறினார்களோ தெரியவில்லை. 1991ஆம் ஆண் டுடன் ஒப்பிடுகையில் அவ்வாண்டு நடந்த சம்பவங்களைப் போன்று இடம் பெறாவிட்டாலும் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டு விட்டது என்று நான் கூற மாட்டேன்.

தற்பொழுது என் முன்னால் வைக்கப்பட்டிருக்கும் கேள்வி அகதிகளை இலங்கைக்கு தற்பொழுதுள்ள நிலையில் திருப்பியனுப்பலாமா என்பதே. இதுவரை கூறியவற்றிலிருந்து கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழும் தமிழர்களுக்கு நேரிடும் சம்பவம் உங்களுக்குத் தெரியும். அடுத்தது எனது சொந்த ஊரான மட்டக்களப்பில் 70,000 மக்கள் அகதி முகாம்களிலும் மொத்தமாக 90% ஆனவர்கள் கட்டாயமாக குடி பெயர்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இவர்களது விவசாயம், மீன்பிடி போன்ற நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன. விவசாயக் காணிகளுக்குப் போய் விவசாயம் செய்ய அனுமதி கிடைப்பதே பெரிய கடினம். அப்படி வெற்றிகரமாகச் செய்து முடித்து விட்டா லும் முழு அறுவடையையும் வீடு கொண்டுவர அனுமதிப்ப தில்லை. அரச பங்கீட்டு உணவையே பெரும்பாலானோர் எதிர்பார்த்து வாழ்கின்றனர். இது போதியளவு மக்களுக்குக் கிடைப்பதுமில்லை. அத்துடன் சில சமயம் மிகுந்த கால தாமதம் இடம் பெறுகின்றது. இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்கள் அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். எமது பகுதியில் 21,000 ரூபாவை சகல மறுவாழ்வுச் செலவுக்கும் அளிப்பதாக அரசு உத்தரவாதம் அளித்தது. ஆனால் இது உடைந்த வீட்டைத் திருத்துவதற்கே போதுமான தொகையல்ல. இதுகூட மறுவாழ்வு தேடும் பலருக்கு ஒரு முயற்கொம்பாகவே உள்ளது.

இதுதான் ஒட்டு மொத்தமாக அங்குள்ள நிலை. அரசு சார்பற்ற நிறுவனங்களும் மேற்கு நாடுகளும் இலங்கை அரசுடன் பேசி மக்கள் அவலங்களைப் போக்க நிர்ப்பந் தித்தால் நல்ல பலன் கிடைக்கும். இன்றுள்ள நிலவரங்களைத் தொகுத்துப் பார்த்தால், கொழும்பும் அதன் சுற்றுப்புறமும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பான இடங்கள் அல்ல, இரா ணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் பிரதேசங்களில் தொடர்ந்தும் இளைஞர்கள், யுவதிகள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்படுவது உண்மை, இப்பகுதிகளில் அகதி முகாம்களில் வாழ்வோரால் மீண்டும் தமது குடியிருப்புக் களுக்குச் சென்று வாழ முடியாத நிலை, இந்தியாவிலிருந்து வந்த அகதிகளைப் பராமரித்த ஐ.நா.அகதி ஸ்தாபனம் தன் னால் மேலும் பரமரிக்க முடியாது எனக் கைவிரிப்பு, வடக் கில் பொருளாதாரத்தடையும், மருத்துவத்தடையும், குண்டு வீச்சும் இந்நிலைகளுக்குத்தான் வெளிநாடுகளிலிருந்து திரும்பும் அகதிகள் செல்ல வேண்டும். □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏர்ணஸ்ரோ சே குவேரா

ப. புஷ்பராஜன்



தீக்குச்சி போன்ற கால்களுடனும் மிக மெலிந்த தோற்றத்துடனும், ஆஸ்த்மா நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் அச்சிறுவனைப் பார்த்த எவருக்கும், இந்தச் சிறுவன் எப்படி வாழப்போகிறான் என்ற சாதாரண எண்ணத்தைத்தான் தோற்றுவிக்கும். ஆனால், அச்சிறுவனோ நோயின் வேதனையிலும் எதையாவது படித்துக்கொண்டோ அல்லது தன் தந்தையுடன் ஏதாவது சமூகப் பிரச்சினை பற்றி விவாதித்துக் கொண்டோ இருப்பான். தனக்குள்ளேயே தன் சிந்தனைகளின் முடிவுகளுக்குரிய மன உறுதியை, ஒரு கலைஞனின் நுட்பத்தோடு சிறுகச் சிறுகச் செதுக்கி வளர்த்துக்கொண்டிருந்தான். அச்சிறுவன்தான், பிற்காலத்தில் ஏகாதிபத்திய உலகிற்கு ஒரு திகில் நினைவாகவும், உலகெங்கிலுமுள்ள ஒடுக்கப்படும் மக்களின் உந்து சக்தியாகவும் திகழ்ந்த ஏர்ணஸ்ரோ சே குவேரா.

ஆர்ஜென்ரீனாவிலுள்ள ரொசாரியோவில் 19280 ஜூன் 14இல் பிறந்த சே, தனது வளரிளமைப் பருவம் முழுவதும் – மருத்துவம் கற்று வந்த போதிலும் – ஊர் சுற்றுவதிலேயே அதிக விருப்புடையவராக இருந்தார். லத்தீன் அமெரிக்கா முழுவதும் அவர் சுற்றியபோது சாதாரண மக்களின் வாழ்வு முறைகள், உணர்ச்சிகள், வாழ்வின் கடை நிலை போன்றவைகள் அவரை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கின. அரச அதிகாரத்தால் அடக்கி ஒடுக்கப்பட்ட சாதாரண மக்கள்பால் அவர் அனுதாபம் கசிந்தவேளை, ஏகாதிபத்தியத்தின்மீது கடும் வெறுப்பை ஏற்படுத்திக்கொண்டார். "மத்திய அமெரிக்காவில் சந்தித்த வறுமையினால் சே மிகவும் நிலைகுலைந்து போயிருந்தார். அவர் எளிமையாகக் காட்சியளித்தாலும் உள்ளேயிருந்து ஒலித்துக்கொண்டிருந்த ஒரு குரலுக்குச் செவிசாய்த்துக் கொண்டிருப்பவராகவும், உலகத் தில் நடக்கும் அதிகாரத்திற்குத் தான் பொறுப்பு ஏற்றுக் கொள்பவர் போலவும் காணப்பட்டார்" என, அவர் நண்பர் கிரனேஸ் அக்கால சேயை நினைவு கூருகிறார். இவ்வாறே பிற்பட்டகால சே பற்றி பிடல் நினைவு கூருகிறார். "இக்கண்டத்தின் இதர பகுதிகளிலும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்கள் வெடிக்கும் என்ற கனவுகளால் அலைக்களிக்கப்பட்டுக் கொண்டிருந்தார். பிறர்க்கென வாழும் கொள்கையுடைய அவர் மிகவும் தன்னலமற்றவராக விளங்கினார்". இவரது பிறர்க்கென வாழும் கொள்கையும், உலகத்தில் நடக்கும் அதிகாரத்திற்குத் தானே பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் மனோபாவமும் சேர்ந்துதான் உலகின் தலைசிறந்த போராளியாக உருவாக்கியது.

சே, ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்திருந்த போதிலும், போராட்டம் ஒடுக்கப்படும் மக்களின் விடிவுக்காகவும், புதிய மனிதர்களை உருவாக்குவதற்காகவும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட பல புரட்சிகர போராட்டங்கள், வெற்றியின் பின்னால் அதுவே ஒரு புதிய அதிகார அமைப்பாக மாறி, தம் மக்கள்மீது மேலும் அதிக சுமையாகி, வழி தவறிப் போன பல புரட்சிகளை வரலாறு எத்தனை தடவைகள் சந்தித்துள்ளது. இந்த எதிர்நிலை, கியூபப் புரட்சிக்குப் பின்னர் கியூப மண்ணில் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் சே அதிக கவனமுடன் இருந்தார். மனித மேன்மைக்காக எந்த சித்தாந்த நெகிழ்வுகளுக்கும் அவர் தயாராக இருந்தார். கம்யூனிஸ்டுகள் எப்போதும் மனிதனை மாற்று முன்பு ஒரு சோசலிசப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவது அவசியம் என வற்புறுத்துபவர். ஆனால் சேயோ ஒரு சோசலிசப் பொருளாதாரம் சமுதாயத்தில் பேராசையைத் தோற்றுவிப்பதிலும், கூட்டு உத்வேகத்தில் குளிர் காய்வதிலும், தனிப்பட்டவர்களின் குறிக்கோளை ஈடேற்றுவதில் போய் முடியுமானால், அதையடைய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், தியாகங்கள் அனைத்தும் அர்த் தமில்லாமல் போய்விடும் என நம்பினார். இதற்காக அவர் பல விவாதங்களில் ஈடுபட்டார். தனது தலைவரும் வழிகாட்டியுமான பிடல் கஸ்ரோவுடன் கூட பல தடவைகள் விவாதித்துக்கொண்டார். தலைவன் என்பதற்காகவோ, வழிகாட்டி என்பதற்காகவோ தனது கருத்துக்களை விழுங்கிக்கொண்டு தலையாட்ட சே என்றும் தயாராக இருந்ததில்லை. பெரும் அதிகாரமுடைய ஓர் அரசைக் கட்டி எழுப்புவதில் அவர் விருப்பமில்லாதவராக இருந்தார். தங்களுடைய தனிப்பட்ட உத்வேகங்களின் மூலமாக அனைத்து மக்களும் கூட்டு ஊக்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதில் அவர் விருப்பம் கொண்டிருந்தார்.

புரட்சி வெற்றியடைந்த பல நாடுகளில் இன்று அதிகாரத்தில் உள்ளவர்கள், அதிகார சுகத்திற்குப் பலியாகிப் போனவர்களாயும், பதவி மோகம் கொண்டவர்களாயும், அதைத் தக்கவைப்பதற்காக பல உயிர்களைப் பலியெடுக்கக் கூடியவர்களாயும் மாறிய இரத்தக்கறை படிந்த பக்கங்களை வரலாறு திறந்து வைத்துள்ளது. இந்தப் போக்கிலிருந்து சே முற்றிலும் மாறானவராய் இருந்தார். அவர், கியூபப் புரட்சிகர அரசில் பல முக்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதவிகளை வகித்திருக்கிறார். பல வெளிநாட்டு கருத்தரங்குகளில் கியூபப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டிருக்கிறார். தேசிய வங்கியின் இயக்குநராக, தொழில்துறை அமைச்சராக இருந்திருக்கிறார். அவர் நினைத்திருந்தால் தமக்குக் கிடைத்த பதவிகளுடனும் வசதிகளுடனும் தனது வாழ்க்கையை அமைதியாகக் கழித்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்ய விடாமல் சேயைத் தடுத்த சக்திதான் என்ன? பிறர்க்கென வாழும் கொள்கையும், உலகத்தில் நடக்கும் அதிகாரத்திற்குத் தானே பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் மனோபாவமும் அவரை அவ்வாறு இருக்க வைக்க முடியவில்லை. எப்படி எங்கேயோ பிறந்து, கியூப நாட்டுப் புரட்சியோடு தன்னை இணைத்துக்கொண்டு அதன் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தாரோ, அந்த மனோபாவம் இப்போது வேறொரு நாட்டின் முளைவிட்ட புரட்சியின் குரலுக்குச் செவிசாய்க்கத் தொடங்கியது.

அவர் பிடலுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்: '1965இல் கியூபப் புரட்சியில் எனக்களிக்கப்பட்டிருந்த கடமைகளை நிறைவேற்றி விட்டேன் என்றே நான் உணருகிறேன். ஆகவே உங்களிடமிருந்தும் நமது தோழர்களிடமிருந்தும் இப்போது என்னவர்களாகிவிட்ட கியூப மக்களிடமிருந்தும் விடைபெறுகிறேன்....

.......இந்த எளியவனின் உதவிக்கரம் தற்போது வேறு சில நாடுகளிற்குத் தேவைப்படுகிறது. நாம் பிரிவதற்கான நேரம் வந்துவிட்டது. எங்கிருந்தாலும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் கடமையை நான் நிறைவேற்றுவேன் என்பதை மனதில் நிறுத்திக் கொள்வேன்....

......நான் எனது மனைவி மக்களுக்காக எந்தச் சொத்தையும் விட்டுச் செல்லவுமில்லை, அதற்காக வருத்தப் படவுமில்லை. அப்படி இருப்பதில் எனக்கு மகிழ்ச்சிதான். நான் அவர்களுக்காக எதையும் கேட்கவில்லை. அவர்களின் கல்வி மற்றும் தேவைகளை அரசே கவனித்துக் கொள்ளும் என்பதால்.....

எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல் சே கியூபாவில் எப்படி வாழ்ந்தார் என்பதற்கு இதைவிட மேலான சான்று எதுவும் தேவையில்லை. ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவது ஒவ்வொரு நாட்டின் புரட்சியாளனதும் நியாயமான கடமை என்றே கருதினார். தானே முன்மாதிரியாகவும் விளங்கினார். இன்று புரட்சியாளனாய் இருப்பதென்பது ஒவ்வொரு அரசியல் நிலை, புறச் சூழல், சர்வதேச அரசியல் நிலை என்பவைகளுக்கேற்ப மாறுபட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு புரட்சியாளனாய் இருப்பது என்பது பற்றித் தனது மக்களுக்கு எழுதிய கடிதத்தில்: 'உன் வயதில் அதற்கு அர்த்தம், நிறைய விசயங்களைக் கற்றுக்கொள்வதும், எப்போதும் நியாயமான காரணங்களுக்கு ஆதரவு தரத் தயாராயிருப்பதும்தான்.....'. இன்று தமது நாட்டின் லாபங்கள் கருதி இன்னொரு நாட்டின் நியாயமான காரணங்களைப் புதைத்துவிடும் சர்வதேச அரசியல் சூழலில், சேயின் குரல் தனியாக ஒலிக்கக்கூடியதுதான். தான் நியாயம் எனக் கருதிய ஒன்றிற்காக, சே தனது சகல சுகங்களையும் துறந்து பொலிவியக் கெரில்லாக்களுடன் சேர்ந்து போராடப் புறப்பட்டு விட்டார். சமுதாயப் புரட்சி வரலாற்றிலேயே படிப்படியாய் உயர்ந்து உச்சிக்குச் சென்று அதைத் தானாகவே உதறி எறிந்துவிட்டு மீண்டும் அடித்தளத்திலிருந்து அனைத்தையும் தொடங்கிய ஒரே ஒரு மனிதன் சே மட்டும்தான்.

கியூப மண்ணைவிட்டு சே வெளியேறிய பின்பு, அவரைப் பற்றிய சரியான தகவல்கள் எதுவுமே கிடைக்கவில்லை. அங்கும் இங்கும் கண்டதாக ஆதாரமற்ற செய்திகளே உலவின. இதன் பின்னர், கியூப மக்களுக்கும், கியூப அரசிற்கும் உலக முழுவதுமுள்ள புரட்சியின்பால் ஈர்க்கப்பட்ட மக்களுக்கும் கிடைத்த செய்தி அவர் பொலிவியாவில் கொல்லப்பட்டு விட்டார் என்ற செய்திதான்.

1967 ஒக்ரோபர் மாதத்தில் பொலிவியாவில் நடைபெற்ற ஒரு தாக்குதலின்போது காலில் காயமுற்ற சே, பொலிவிய அரசுப் படையினரால் கைது செய்யப்பட்டார். "நாங்கள் அவரைக் காப்பாற்ற முயற்சித்தோம். ஆனால் அது முடியாமல் இருந்தது. ஏனெனில் எங்களில் மிகக் கொஞ்சப் பேரும் அவர்களில் அனேகம் பேரும் இருந்தார்கள்" என்றார், பின்னால் சிசிலிக்குத் தப்பிச் சென்ற பொம்போ என்பவர்.

லாகிக்குவாராவிலுள்ள கிராமப்புறப் பாடசாலை அறையொன்றில் காயம்பட்ட நிலையில் அடைத்து வைக்கப்பட்ட சே, யுத்த தர்ம நியாயங்களுக்கு மாறான விதத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். காட்டுத் தடிகளினால் கட்டப்பட்ட, காலற்றக் கட்டில் ஒன்றில் அவர் உடல் கிடத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த நிலையில் கிறீஸ்துபோல் காட்சியளித்ததாகப் பார்த்தவர் கூறினார். இதன் பின்பு அவர் உடல் லாகிக்குவாராவிலிருந்து வலிகிராண்டியிலுள்ள வைத்திய சாலையில் C.I.A. அதிகாரியான பீலிக்ஸ் ராமோஸ் என்பவனிடம் ஒப்படைக்கப்பட்டது. அங்கு பத்திரிகையாளரின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த சேயின் உடல் இரு நாட்களுக்குள் மறைக்கப்பட்டு விட்டது. காரணம் புவனாஸ் அயரசில் இருந்து வலிகிராண்டோ வந்துள்ள சேயின் சகோதரர் அவரது உடலைப் பார்த்துவிடக் கூடாது என்பதற்காகவே.

அவரது கைகளும், தலையும் வெட்டி எடுக்கப்பட்டு விட்டதாயும், உடல் ஒரு சிறிய விமானம் மூலம் பொலிவியன் C.I.A. அதிகாரிகளால் எடுத்துச் செல்லப்பட்டு எங்கோ வீசப்பட்டு விட்டதாகச் செய்திகள் வெளிவந்தன.

எது எப்படி இருந்தபோதிலும், சே கொல்லப்பட்டு விட்டார். இவ்வளவு முக்கியமான ஒரு போராளி ஒரு முக்கியத்துவமற்ற சிறு யுத்தத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கக்கூடாது எனப் பலர் கருதினார்கள். ஒரு போராட்டத்தின் முக்கியத்துவத்தை வெற்றி தோல்விகளைக் கொண்டா தீர்மானிப்பது? ஒரு கெரில்லாப் போராளிக்கு ஒவ்வொரு போராட்டமும் முக்கியமானதே. ஒவ்வொரு போராட்டத்திலும், போராளி பணயம் வைப்பது தனது மதிப்புமிக்க உயிரையே. போராட்டத்தின் முக்கியத்துவத்தை, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராளிகளால்தான் சரியான அர்த்தத்தில் உணர்ந்துகொள்ள முடியும்.

சே தனது மரணத்தை முன்னுணர்ந்தவராகவே காணப்பட்டார். கியூபாவை விட்டுப் புறப்படு முன் தன் குடும்பத்திற்கு எழுதிய கடிதத்தில், "ஒருவேளை இது என்னுடைய கடைசிக் கடிதமாக இருக்கலாம். இது என்னுடைய குறிக்கோள் அல்ல. தர்க்க ரீதியாக ஆராய்ந்து பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது. அப்படி நடக்குமெனில் எனது கடைசித் தழுவலை ஏற்றுக்கொள்ளுங்கள்.......

.....20ஆம் நூற்றாண்டின் இச்சிறிய போராளியை அவ்வப்போது நினைத்துக்கொள்ளுங்கள்...."

என்று குறிப்பிட்டார். இந்த உலகிற்கு ஒரு உன்னதமான மரபுச் செல்வத்தை விட்டுச் சென்றுள்ளார். அதுதான் மனித நேசிப்பு. தனது வாழ்நாள் பூராவும் கவிதைகளை நேசித்து வந்த இந்த மாபெரும் போராளியைப் பற்றி பிடல், "ஒரு மனிதனை இழந்ததால் ஏற்பட்ட துக்கத்தை மட்டுமல்ல....உயர் நன்னடத்தையுள்ள ஒரு மனிதனை இழந்த துக்கத்தால்....மிக உன்னத மனிதனை இழந்த துக்கத்தால்....எனக் குறிப்பிட்டார். சே ஒரு போராளி மாத்திரமல்ல, அவர் ஒரு உன்னதமான மனிதரும்கூட.

வெற்றிடங்களை இயற்கை விடுவதில்லை எனக் கூறுவர். ஆயினும் சே விட்டுச்சென்ற வெற்றிடத்தை இயற்கையால் நிரவ முடியவில்லை.

□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அகதிகள் பற்றிய மூன்று திரைப்படங்கள் (3)

யமுனா ராஜேந்திரன்

மூன்றாவது திரைப்படம் தப்பித்தல் (*Escape*). இது துருக்கிய/சுவீடியத் திரைப்படம்.

துருக்கியின் கிராமப்புறம். ஆடுகளை மேய்த்து வாழ்க்கை நடத்தும் நாடோடி வாழ்க்கை. நிலம் விளைவதற்கான சாரத்தை இழந்து விட்டது; வரண்ட வாழ்க்கை.

மிகப் பெரியதொரு கூட்டுக் குடும்பத்தையும், அந்தக் குடும்பம் சிதறுண்டு போவதையும் இப்படம் சொல்லுகிறது.

சுவிட்சலார்ந்துக்குப் போனால், பொருளாதார ரீதியில் தம் துன்பங்களிலிருந்து மீளலாம் என்று நினைக்கிறான் ஆட்டிடையன்.

அவன், அவன் மனைவி, அவனின் நிறையக் குழந்தைகள், அவனது முப்பெய்திய தாய் தந்தையர்.

தனது கால்நடைகளையும், நிலங்களையும் விற்றுவிட்டு, தனது தாய் தந்தையருக்குக் கொஞ்சம் பணம் கொடுத்துவிட்டு, தானும் தனது மனைவியும் மட்டுமே சுவிட்சர்லாந்துக்குப் போவது அவன் திட்டம். பிற்பாடு அவர்களை அழைத்துக் கொள்வது அவன் நோக்கம். அந்தக் குடும்பத்தின் மூத்தவர் சொல்கிறார்:"குழந்தைகளை இழப்பது - விட்டுவிட்டுப் போவது - எமது கலாசாரத்தின் வேர்களை இழப்பது - விட்டுவிட்டுப் போவது மாதிரி. ஏதேனும் ஒரு குழந்தையாவோனும் அழைத்துப் போங்கள். எம் குழந்தைகள், எம் வாழ்வின் வேர்கள்!"

அதன்படி ஓர் ஆண் குழந்தையுடன்/ 3-4 வயதுச் சிறுவனுடன் அவர்கள் பயணம் தொடங்குகிறது.

கொண்டுவந்த பணம் போதாது என்கிறார் ஏஜென்ட். விமானத்தில் போக முடியாது என்கிறார். திருட்டுத்தனமாக சரக்கு ரயிலில் ஏற்றி விடுகிறார்கள்.

ஏஜென்டுகள் களவாணிகள். இருவகைக் களவாணிகள். துருக்கியக் களவாணிகள். ஸ்வீடியக் களவாணிகள். சொந்த மக்களைக் கொள்ளையடிப்பவன் ஒருபுறம், மக்களின் அறியாமையைக் கொள்ளையடிக்கும் அந்நியன் மறுபுறம்.

இந்த ஏஜென்டுகள் சொல்லிக் கொடுக்கிறார்கள்! "நீங்கள் பொலிஸ்காரர்களிடமோ குடியேற்ற அதிகாரிகளிடமோ அகப்பட்டுக் கொண்டால், உடனே இரண்டு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி 'அரசியல் அடைக்கலம் கோரும் அகதி' என்று சொல்லுங்கள்".

ஒரு மலைச் சரிவுக்குக் கூட்டிவரப்படும் துருக்கிய மக்களின் கூட்டம்.

இவர்கள் பயணம் ரயில் மூலம், பஸ் மூலம், வழியில் கிடைத்த சரக்கு வாகனம் மூலம் என மிகச் சிரமம் வாய்ந்தது.

மலைச் சரிவுகளுக்கு கூட்டிவந்த சுவீடிய ஏஜென்டின் துருக்கியக் கையாள், அவர்களுக்கு சுவிட்சர்லாந்து போகும் வழியை விளக்குகிறான்.

"இந்த மலை உச்சியைக் கடந்து இறங்கி, அடுத்த பக்கம் போய் விடுவீர்களானால் அதுதான் சுவிட்சர்லாந்து. அங்கு போனவுடன் வேலை கிடைக்கும். லட்சம் லட்சமாகச் சம்பாதிக்கலாம். அப்புறம் சந்தோசம்தான்.

நீங்கள் எல்லோரும் ஒன்றாகப் போகக்கூடாது. தனித்தனிக் குழுவாக, சிறுசிறு கூட்டமாகப் போக வேண்டும்.

பெண்கள் தனிக் கூட்டமாகவும் ஆண்கள் தனிக் கூட்டமாகவும் போக வேண்டும்".

நகரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அவர்களைச் சந்திப்பதாக அவன் சொல்கிறான். ஒரு வழிகாட்டியையும் ஏற்பாடு செய்கிறான். காற்று, பனியை வாரி வீசி வீசியடிக்கிறது. ஹோவென்று சத்தம். காற்றை எதிர்த்து நிற்க முடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாமல் மக்கள் வீழ்கிறார்கள்.

வழிகாட்டி இன்று போக முடியாது என்று மறுக்கிறான். ஏஜென்டின் கையாள் கட்டாயம் இன்று போகவேண்டும்; நாளை மற்றொரு குழு வருகிறது என்கிறான்.

வழிகாட்டி தீவிரமாக மறுத்து விடுகிறான். ஏஜென்டின் கையாள் அவனைப் பலமாகத் தாக்கி, கொடூரமான முறையில் மலைப் பாதையில் உருட்டி, அடித்துக் கொன்று விடுகிறான். அம்மக்கள் கூட்டத்திடம் பயணத்தைத் தொடரும்படி சொல்கிறான்.

பயணம் தொடர்கிறது. இருட்டி விடுகிறது. இருண்டு, கண்ணுக்கு எட்டியவரை பனிப் பள்ளத்தாக்குகள், மலைகளில் பிரதிபலிக்கும் வெள்ளை நிறம். கால்கள் புதையப் புதைய நடக்கும் மனிதக் கூட்டம். விறைத்து விழும் பிணங்கள். அதை அவ்வாறே விட்டுவிட்டு மேலும் தொடரும் மனிதக் கூட்டம்.

பெண்கள் கூட்டம் மிகுந்த துன்பங்களுக்கிடையில் ஓர் ஓய்வு விடுதியை அடைகிறது. பூட்டிய கண்ணாடி அறைகளுக்கு வெளியில் நின்று அரற்றுகிறது. பனியிலும் குளிரிலும் விறைத்த தமது கால்களையும் உடம்பையும் சொல்லி உதவி செய்ய, பசியாற்றக் கெஞ்சுகிறது.

குடியேற்ற அதிகாரிகள் வருகிறார்கள்.

மனைவியைப் பிரிந்த ஆட்டிடையன், இருளில் தனது கூட்ட நண்பர்களையும் பிரிகிறான். இடுப்புவரை பெய்து நிற்கிற பனி. குழந்தையால் நடக்க முடியவில்லை. குழந்தையின் உடல் விறைத்து விட்டது. அவன் தோளில் மீது துவண்டு விட்டது.

அவன் அரற்றுகிறான். மனம் போனபடி சுற்றுகிறான். அழுகிறான். அங்குமிங்கும் ஓடுகிறான்.

பனியில் அகப்பட்டுக் கொண்டவர்கள் பற்றி அதிகாரிகளுக்குச் செய்தி போகிறது. பனி அகற்றும் வாகனங்களோடு விரைகிறார்கள் அதிகாரிகள்.

இருண்ட குன்றுகளுக்கிடையில் மாறிமாறி வீசிப் போகும் கண்ணைக் கூசும் வெளிச்சம். சுவீடிய மொழியில் ஒலிபெருக்கியில் அடிக்கடி அழைக்கும் சப்தம்! குன்றுகளுக்கிடையே பனிக்காற்றின் பேரோசையும் புரியா மொழியும். இவை, எவற்றையும் ஆட்டிடையனுக்கு எட்டும்படி வைக்கவில்லை.

இருட்டு. மாறிமாறி வரும் திட்டான ஒளி, குன்று, பனி, கதறல், தீனக்குரல்.

விடிகிறது. பனி வாரும் இயந்திரங்கள் பாறைகளில் பனி வாருகிறது. இவன் பிரதான சாலைக்கு வருகிறான். அவன் தோளில் குழந்தை. சுரணையற்ற சாய்ந்த தொய்ந்த வாழையிலை போன்ற பிஞ்சு உடல். குழந்தை உயிரோடு இருக்கிறது என்றே அவன் நம்புகிறான்; உயிரோடு இருக்க வேண்டும் என்றே நாமும் விரும்புகிறோம். நம் மனம் அலை மோதுகிறது. மறுகுகிறது.

தூரத்தில் அவன் நண்பர்கள். அவர்கள் அருகே அவன் போகும் முன்பே, வழியில் வந்த வாகனத்தில் ஏறிப் போகின்றார்கள்.

சிவந்த கண்களில் கண்ணீர்த் துளிகளோடு வழிபார்க்கிறான். வரும் வாகனமொன்றில் ஒரு முதியவர் அவனையும் குழந்தையையும் ஏற்றிக்கொண்டு சென்று மருத்துவமனைக்குக் கொண்டு விடுகிறார்.

குழந்தை மருத்துவமனைக்கும், இவர்கள் குடியேற்ற அதிகாரிகளிடமும் கொண்டு போகப்படுகிறார்கள். குடியேற்ற அதிகாரிகளின் விசாரணைக்குப் பின், தனது மகனைப் பார்க்க அழைத்து வரப்படுகிறான்.

நிசப்தம். நீண்ட மௌனம். சவ மௌனம். வரட்சி.

குழந்தை இறந்து விட்டான்.

தனது குழந்தையைக் கொன்றுவிட்டதாக அழுது குழறி, இவன் மார்பின் மீது கையால் மாறிமாறி அடித்து, இவனைப் பிடித்து உலுக்குகிறாள் மனைவி.

குழந்தையைக் கொலை செய்த குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்படுகின்றான்.

இறுதிக் காட்சி: சிறைக் கம்பிகளுக்கிடையில் திரை முழுக்க ஆட்டிடையனின் முகம். அவன் முகத்தில் மொய்க்கும் ஈக்கள். நிச்சலனம்.

அவனையும் குழந்தையையும் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற சுவீடிய முதியவர் வருகிறார்.

குழந்தையின் இறுதிக் கிரியைகளைத் தான் பொறுப்பேற்கிறேன் என்று சொல்கிறார். அவனுக்கு இறுதியாகச் சொல்ல ஏதேனும் இருக்கிறதா என்று கேட்கிறார்.

ஆம். அவனுக்குச் சொல்ல இருக்கிறது!

"என் செல்ல மகனின் இறுதிக் கிரியை, என் சொந்தக் கிராமத்தில் நடக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்".

அவன் முகம் திரையில் முழு வடிவத்துடன் உறைகிறது.

முதல் இரண்டு படங்களிலும் இருந்த பிரச்சினை பற்றிய புரிதலும் மனித நேயமும் இப்படத்தில் இல்லை.

குழந்தையின் மரணம் பற்றின சம்பவங்களுடன் காட்சியமைப்பும் மிகமிகக் கொடூரமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது என்றே நான் கருதுகிறேன்.

மேலாக, படத்தில் வரும் மக்கள் வெறும் பொருளாதாரக் காரணங்களுக்காக மட்டுமே புலம் பெயர்வதாகக் காட்டப்படுகிறார்கள்.

'அரசியல் அகதி' என்று சொல்ல வேண்டும் என்ற விஷயமெல்லாம் எள்ளலாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

படத்தில் மக்களுக்கு ஏற்படும் துயரத்துக்கான புறக் காரணங்களாக துருக்கிய ஆட்சியமைப்பின் அடக்குமுறைத் தன்மை, சுவீடியக் குடியேற்றக் கொள்கையின் குரூரம் போன்றவை சித்தரிக்கப்படவில்லை.

இப்படத்தின் இயக்குநர் ஒரு மேற்கத்தியர். நடித்தவர்கள் பெரும்பாலும் துருக்கியர்கள்.

இந்தப் படம் எம்மக்கள் குறித்த துக்கத்தை ஏற்படுத்திய அதேசமயம், இயக்குநரின் மீதான ஆத்திர உணர்வையும் எனக்குத் தந்தது.

இந்த எனது ஆத்திரம் நிறவாதத்துக்கெதிரான ஆழ்ந்த எதிர்ப்புணர்வு என்றே நான் கருதுகின்றேன்.

எனது அறிமுகம் பற்றிய எதிர்வினைகளை நான் எதிர்பார்க்கிறேன். □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூல் அறிமுகம்

பேராசிரியர்:
Kathryn Jacques
University of New England
Australia

நூல்: **South Asian Strategic Issues: Sri Lankan Perspectives**
தொகுப்பாசிரியர்: *S.U.Kodikara*
கட்டுரை ஆசிரியர்கள்: *S.U.Kodikara, M.Werake, J.Uyangoda, B.Bastiampillai, A.Jeyawardane, A.Sivarajah, K.Keerawella*
வெளியீடு: *New Delhi, Sage Publication & 1990 pp 204*
விலை: *இந்திய ரூபாய்: 165*

இந்நூலில் இலங்கையின் பல்வேறு பல்கலைக் கழகங்களைச் சார்ந்த விரிவுரையாளர்கள் எழுதிய 8 கட்டு ரைகள் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. இக்கட்டுரைகள், சர்வ தேச உறவுகள் சம்பந்தமான கொழும்புப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் திட்டத்தில் 1987இல் படிக்கப்பட்டவையாகும். இந்நூலானது தென்னாசியா எனும் பிரதேசக் கருத்துக்களுக்குள் மட்டுமே அமைந்துவிட வேண்டும் எனத் தொகுப்பாசிரியர்கள் முடிவு எடுத்திருப்பினும், இப்பிரதேசம் சம்பந்தப்பட்ட அரசியல் நூல்களுக்கு இது மேலும் ஒரு பங்களிப்பாக அமையுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. கட்டுரைகள் யாவும் கல்வி ஆய்வுத் தரத்தினை அடைந்திருப்பதுடன், சர்வதேச அரசியல் விவகாரங்களில் இலங்கை வகிக்கும் பங்கு பற்றிய உண்மைகளில் உட்கிடையான பின்னணி அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நாம் குறிப்பிட்டாலும், இவ் வொப்பந்தம் இடம் பெற்று மூன்று மாதத்திற்குள்ளேயே மேற்படி கட்டுரைகள் வெளிவந்தன என்பது குறிப்பிட வேண்டியதாகும்.

கொடிகாரா அவர்கள், 1950களில் இருந்து தென்னாசிப் பிராந்தியத்தின் பாதுகாப்பு விவகாரங்கள் பற்றி, முதலாவது கட்டுரையில் ஆய்வு செய்துள்ளார். இந்து சமுத்திரத்தின் தென்னாசியப் பிராந்தியத்திற்கு அப்பாற்பட்ட நாடுகளான அமெரிக்கா, சோவியத் யூனியன், சீனா போன்றவை தமது பூகோள கேந்திர நலனை நிலைநாட்டுவதில் இப்பிராந்தியத்தில் கொண்டிருந்த நடவடிக்கைகளைத் திறம்படக் கூறியிருப்பினும் அதன் பிரச்சினைக்குரிய அம்சங்களில் அதிக ஈடுபாட்டைக் காட்டவில்லை. சர்வதேச அமைப்பில் அடிப்படையாக இருந்தவை என அவர் கருதிய மூன்று பிரதான உறவுகளின் பின்னணியில் தென்னாசியாவை அணுகியுள்ளார். (1) சீன–சோவியத் தகராறு; (2) ஆப்கானிஸ்தானில் சோவியத் தலையீடு; (3) இந்து சமுத்திரத்தில் வல்லரசுகளின் கடற்பல ஆதிக்கப் போட்டி. இக்கருத்துக்களை நிறுவுவதற்குத் தக்க ஆதாரங்களையும் எடுத்துக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் தென்னாசிய நாடுகள் வல்லரசுகளின் விருப்பு வெறுப்புகட்கு முழுவதும் தலையாட்டிக்கொண்டிருந்தனவா என்பது விவாதத்திற்குரிய விடயமென்றே குறிப்பிட வேண்டும்.

வீராக் என்பவரது கட்டுரை, 1947 முதல் சீன-இந்திய உறவுகளில் ஏற்பட்டு வந்த வளர்ச்சிகளை எடுத்துக்காட்டுவதுடன் இதன் பின்னணியில் உள்ள உளவியல் ரீதியான அம்சங்களை முதன்மைப்படுத்திக் காட்டுகின்றது. அவை யாவன: (1) ஆசிய விவகாரங்கள் சம்பந்தமாக நேருவின் சீன-இந்தியக் கூட்டுக் கொள்கை; (2) வரலாற்று ரீதியாக இமயமலை இந்தியாவிற்கு அளித்துவந்த எல்லைப் பாதுகாப்பு; (3) இப்பிராந்தியத்தில் இந்தியா அடைந்த வளர்ச்சியினைக் கண்டு இலங்கை, நேபாளம், வங்காள தேசம் ஆகிய மூன்று நாடுகளும் சீனாவுடன் நட்புறவுகளை வளர்த்து வந்தமை, 1980களில் சீன-இந்திய எல்லை விவகாரங்களில் ஏற்பட்ட சமரசங்களினால், சீனாவின் பிராந்திய கேந்திர முக்கியத்துவக் கொள்கைகளில் ஏற்பட்டு வருகிற மாற்றங்களையும் வீராக் எடுத்துக் காட்டியுள்ளார்.

உயாங்கொட அவர்கள் 1970களில் பங்களாதேஷ் அரசியலில் இந்தியா பற்றிய கருத்துக்களில் மாற்றங்களையும், பங்களாதேஷின் தேசியவாதத்தில் இந்தியா பற்றிய பார்வைகளையும் மிகவும் பாராட்டும் வகையில் எடுத்துக் காட்டியிருக்கிறார். இவரது கருத்துக்கள் மிகவும் ஆழமான விடயங்களைக் கொண்டவையும், சிந்திக்கத் தூண்டும் பல உண்மைகளைக் கொண்டிருந்தவையாயினும், நீண்ட வசனங்களையும் கூடிய அலங்கார வார்த்தைகளையும் தவிர்த்து இருந்தால் பாராட்டக்கூடியனவாகவிருக்கும். ஒட்டுமொத்தமாகப் பார்ப்பின் இந்தியா பற்றிய பழைய பங்களாதேஷின் கருத்துக்கள் எவ்வாறு பின்பு மாற்றமடைந்தன என்பது நன்கு புரியவைக்கப்பட்டுள்ளது.

ஏனைய ஐந்து கட்டுரைகளும் இலங்கையின் இனப்பிரச்சினையின் அடிப்படையில் சர்வதேச உறவுகளும், இந்தியாவுடனான உறவுகளும் எவ்வாறமைந்தன என ஆராய்கின்றன. பஸ்தியாம்பிள்ளையினது கட்டுரை இந்த விடயத்தில் பாரபட்சமற்ற முறையில் ஆய்வுகளைச் செய்வதுடன், இனப்பிரச்சினையானது தென்னாசியாவில் சர்வதேச உறவுகளை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை வெளிக்கொணர்ந்துள்ளது.

சிவராஜாவின் கட்டுரை சிங்கள-தமிழ்ப் பிரச்சினை எவ்வாறு கூர்மையடைந்தது என்பதை விரிவாக ஆராய்ந்து இலங்கைத் தமிழ் மக்களுக்கும், தமிழ்நாட்டவர்க்கும் இருக்கும் இன, கலாசார உறவுகளின் தாக்கம் இலங்கை-இந்திய உறவுகளை எவ்வாறு நிர்ணயித்தது என்பதை நன்கு விளக்கியுள்ளது. இவர் வெளிப்படையாக இந்தியாவைக் கண்டித்திருந்தாலும் அதை ஆழமாகச் செய்யவில்லை எனலாம். அத்துடன் தனது கட்டுரையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையை, தனது சொந்த நாட்டின் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ள இந்தியா நடந்துகொண்ட விதங்களைத் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டியுள்ளார்.

மிகுதிக் கட்டுரைகளில், 1987 இலங்கை-இந்திய ஒப்பந்தங்கள் கொடிகாராவினால் நுணுக்கமாக ஆராயப்பட்டுள்ளன. இதனைவிட ஜெயவர்த்தன குறிப்பிடும் (Finlandisation) பின்லாந்துமயமாக்கல் (சோவியத் யூனியனுக்கு அண்மையில் பின்லாந்து இருந்ததால், தன் பிரதேசத்துடன் இணைக்க முயன்று முடியாது போகவே தன் ஆதிக்கத்திற்குச் செவி சாய்க்கும் நாடாகவாதல் வைத்திருக்க முனைந்தமை.) இந்தியா-இலங்கைக்கு எவ்வாறு பொருந்தும் எனவும் ஆராய்ந்துள்ளார். கீரவல்ல 1970களில் இந்து சமுத்திரத்தில் வல்லரசு நாடுகளின் கடல் ஆதிக்கப் பலப்பரீட்சையை ஆராய்ந்து, அதற்கு எவ்வழிகளில் இலங்கை தன்னை இசைவாக்கிக் கொண்டது என்பதை விளக்கிக் கொண்டார். மேலும் இவர், இச்செயல்பாடுகளில் மிகப் பலம் கொண்ட இந்தியாவுடன், இலங்கை எவ்வகைகளில் இணங்கிப் போகவேண்டியுள்ளது என்பதனையும் தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், இந்நூலில் வெளிவந்த சகல கட்டுரைகளும் தென்னாசியா சம்பந்தமான அரசியல் நூல் வரிசைக்குச் சிறந்த பங்களிப்பு என்றே கூறலாம். மிகச் சிறிய நாடான இலங்கைத் தீவு, தென்னாசியப் பிராந்தியத்தில் வகித்துவரும் பங்குகள் என்பன இப்பிராந்தியத்தில் பாதுகாப்புப் பற்றிய விவகாரத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள உதவும் எனலாம். □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# 1993 இலக்கிய நோபல் பரிசு பெறும் கறுப்பினப் பெண்மணி ரோனி மோரிஸன்

ரோஸா நிர்மலா

ஜீன் ஜோர்டன், அலிஸ் வாக்கர், அஞ்சலா டேவிஸ் போன்றவர்கள் அமெரிக்கக் கறுப்பு எழுத்தாளர்கள்; பெண் இயக்கப் போராளிகள்; நிறவெறிக்கு எதிராக எழுத்தை ஆயுதமாக ஏந்தியவர்கள். இவர்கள் வரிசையில் நமது சமகால நாவலாசிரியர் ரோனி மோரிஸன் நிற்கிறார். 1993ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசை ஒக்ரோபர் 8ஆம் நாள் பெற்றிருக்கிறார், ரோனி மோரிஸன்.

நோபல் பரிசு பெறும் முதல் அமெரிக்க – ஆபிரிக்க எழுத்தாளரும் பெண்மணியும் இவர்தான். வோலே சொயெங்கா, டெரிக் வால்காட், காப்ரியல் கார்ஸியல் மார்க்வுஸ் போன்ற நோபல் பரிசு பெற்ற மூன்றாம் உலக எழுத்தாளர்களின் வரிசையில் ரோனி மோரிஸனும் சேர்கிறார்.

இவர்களின் படைப்புலகுதான் ரோனி மோரிஸனின் படைப்புலகும்; காலனியாதிக்கம், நிறவெறி போன்றவற்றிற்கு எதிரான உலகு, இவர்களின் படைப்புலகு.






ரோனி மோரிஸன் அமெரிக்காவைச் சேர்ந்தவர். ஆயினும் அவர், வெள்ளையர் பிரதிநிதித்துவப்படுத்தும் அமெரிக்காவைச் சார்ந்தவரல்ல. கறுப்பு அமெரிக்காவைச் சேர்ந்தவர். இவர் படைப்புலகம் கறுப்பு அமெரிக்காதான். ரோனி மோரிஸன் 1931ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஒஹியோ மாநிலத்தில் பிறந்தவர். ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் பயின்றவர்.

*Random House* புத்தக நிறுவனத்தில் பதிப்பாளராக இருந்தவர். இக்கால கட்டத்தில்தான் அஞ்சலா டேவிஸின் வாழ்க்கை வரலாறு வெளிவந்தது. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான அஞ்சலோ டேவிஸ் மீது அமெரிக்க அரசு வேசி என நாக்கூசாது குற்றம் சாட்டியது. காரணம், அவர் நிறவெறிக்கு எதிரான உத்வேகமிக்க போராளி. அவரது வழக்கு விபரங்களும் புத்தகமாக அப்போதுதான் வெளியானது.

ரோனி மோரிஸன் பதிப்பாளராக இருந்த காலகட்டத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளில் ஒன்று, அமெரிக்கக் கறுப்பின மக்களின் அனுபவங்களைத் தொகுப்பாகக் கொண்டுவர வேண்டும் என்பது. *The Black Book* என்ற அப்புத்தகத்திற்கான தொகுப்பு வேலைகளில் விரிந்ததுதான் ரோனி மோரிஸன் படைப்புலகம்.

அக்காலகட்டத்தைய ஒரு உண்மைச் சம்பவத்தை வைத்து உருவான நாவல்தான் *Beloved (1987)* எனும் நாவல். இது புலிட்சர் இலக்கியப் பரிசைப் பெற்றது.

தன் குழந்தையும் அடிமை வாழ்வு வாழ்ந்திடக் கூடாது என்பதற்காக, தன் பச்சிளங் குழந்தையைக் கொன்ற ஒரு கறுப்பினத் தாயின் வாழ்வு பற்றிய நாவல் அது.

*New York Times* பத்திரிகை தேசிய நாவலாசிரியை என் கிறது மோரிஸனை. உண்மைதான். அருகில் போனால் நாற்றமடிக்கும் அமெரிக்காவை ஆத்திரத்துடன் சித்தரிக்கும் தேசிய நாவலாசிரியைதான் மோரிஸன்.

ரோனி மோரிஸன் சொல்கிறபடி, கடந்தகால வாழ்வின் அத்துணை மனக்கவலைகளையும் மீள நினைவுபடுத்திக் கொள்வதுதான் அவர் எழுத்துக்கள்.

வெள்ளை நிறத்தவர்க்குப் புரிவதற்காக 'அடிக்கோடிட்டு, விபரம் சொல்லி கறுப்பு அனுபவத்தை நான் சொல்லத் தேவையில்லை என்கிறார் மோரிஸன். என் நோக்கம் என் மக்களுக்குத்தான் போய்ச் சேரவேண்டும் என்கிறார்.

இவரது முதல் நாவல் 1970இல் வெளியான *The Bluest Eye.* அடர்ந்த கவித்துவம் வாய்ந்தது இவர் நடை என்கிறார், ஜேம்ஸ் வுட். தற்போது ரோனி மோரிஸன் பிரின் ஸரன் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருக்கிறார்.

'அமெரிக்க வாழ்வியலின் யதார்த்தத்தை வடித்திருக்கிறது' இவரது படைப்புக்கள், என்கிறது நோபல் பரிசுக் குழு. அந்த யதார்த்தம் அடிமைத்தனத்தின் கொடூரம், ஆபிரிக்க மக்களின் நிறவெறி எதிர்ப்புப் போராட்டமும்தான் என்கிறார்கள் விமர்சகர்கள்.

ஜேம்ஸ் பால்ட்வின், லீராஸ் ஜான்ஸ் என வளமான எதிர்ப்புப் பாரம்பரியம் கொண்டது அமெரிக்கக் கறுப்பு எழுத்தாளர் அணி.

ரோனி மோரிஸனுக்குப் பரிசளித்ததன் மூலம் நோபல் பரிசுக் குழு தனது கடந்தகால அரசியல் தவறைத் திருத்திக் கொண்டது என்கிறார், அமெரிக்க *Republic* பத்திரிகை இலக்கிய விமர்சகர்.

ரோனி மோரிஸனின் மிகமிகச் சமீபத்திய புத்தகம் 'இனம் – நீதி – பால் – அதிகாரம்' எனும் தொகுப்பு நூல். இவ்வாண்டு (1993) *Chatto & Vindus Ltd.* பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டிருக்கிறது.

இப்புத்தகம் கிளாரன்ஸ் தோமஸ் எனும் கறுப்பு நீதிபதிக்கும், அனிதா ஹில் எனும் கறுப்பினச் சட்டப் பேராசிரியைக்கும் நடந்த வழக்குப் பற்றிய ஆவணங்கள், மற்றும் அறிஞர்களின் ஆய்வின் தொகுப்பு.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை அரசு சார்பற்ற நிறுவனப் பேரவைக்கு ஒரு வேண்டுகோள்

இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் வன்செயல்கள் தீவிரமடைந்து நாளுக்கு நாள் கொலைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து, 1989ஆம் ஆண்டில் "இலங்கைக்கான ஐரோப்பிய அரசு சார்பற்ற நிறுவனப் பேரவை" ஆரம்பிக்கப்பட்டது. இதில், சர்வதேச அரங்கில் பிரபல்யம் அடைந்த ஐரோப்பிய மனிதவுரிமை, மனிதநேய தாபனங்களும் அபிவிருத்தித் தாபனங்கள் பலவும் அங்கம் வகித்தன. அனைத்துலகிலும் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக, 1993ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இதன் பெயர் "இலங்கைக்கான அரசு சார்பற்ற நிறுவனப் பேரவை" *(NGO Forum on Sri Lanka)* என்று மாற்றப்பட்டது. தற்போது ஐரோப்பாவிலும், அமெரிக்கா,யப்பான், இலங்கை, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் உள்ள 120க்கு மேற்பட்ட அரசு சார்பற்ற நிறுவனங்கள் இப்பேரவையில் அங்கம் வகிக்கின் றன. பேரவையின் அன்றாடக் கடமைகளைக் கவனிப்பதற்காக ஒரு செயற்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினைக்கு நியாயமான ஓர் அரசியல் தீர்வே முக்கியம் என நோக்கமாகக் கொண்டுள்ளபோதிலும், சமாதான முயற்சிகள், மனித உரிமை மேம்பாடு, வறுமை ஒழிப்பு ஆகியவற்றிலும் இப்பேரவை ஆர்வம் கொண்டுள்ளது.

இலங்கையில் மனிதவுரிமை, வறுமை ஆகியவை தொடர்பாக ஆவணங்கள் வெளியிட்டுள்ளதுடன் உலக வங்கி, ஐ.நா. மனிதவுரிமை ஆணைக்குழு மற்றும் அனைத்துலக நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு இலங்கைப் பிரச்சினைகள் பற்றி எடுத்துக்கூறி வருகின்றது. மேற்படி பேரவையின் ஆண்டுக் கூட்டம் கடந்த ஒக்ரோபர் 1ஆம் திகதி ஜெனீவாவில் கூடியது. இக்கூட்டத்தில் மேற்படி பேரவையின் எதிர்காலத் திட்டம் ஆராயப்படவுள்ளதனை அறிந்து, தமிழ் தகவல் நடுவம் பலருடன் கலந்தாலோசித்து கீழ்க்காணும் தமது அபிப்பிராயத்தினைப் பேரவையின் கவனத்திற்குக் கொணர்ந்தது. இவ்வபிப்பிராயங்கள் பேரவையின் வருங்காலத் திட்டங்களுக்கு பலன் தரக்கூடியவையெனவும், இதில் கூறப்பட்டுள்ள அம்சங்களைப் பேரவையின் செயற்திட்டங்கள் உள்ளடக்க முனையும் என்றும் தமிழ் தகவல் நடுவத்திற்குக் கிடைத்துள்ள தகவல்கள் கூறுகின்றன. இப்படியான முயற்சிகள், பிரச்சினைகளை சரியான முறையில் ஒருமித்து அணுகுவதற்கு உதவுமெனவும், இது பேரவை எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவினையும் பலத்தினையும் அளிக்குமெனவும் பல வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

இலங்கைக்கான அரசு சார்பற்ற நிறுவனப் பேரவையின் ஆண்டுக் கூட்டத்தின் கவனிப்புக்குத் தமிழ் தகவல் நடுவம் எடுத்துக் கூறியவை பின்வருமாறு.

"சர்வதேசச் சட்டங்களுக்கு முரணாக இலங்கை அரசு வடக்கு, கிழக்கு மக்கள் மீது விதித்திருக்கும் பொருளாதாரத் தடையால் அவர்கள் படும் இன்னல்களை எமது 'இலங்கை: பொருளாதாரத் தடை' என்ற அறிக்கை விபரித்துள்ளது. சர்வதேச அரங்கில் எந்த ஒரு தாபனமும் இது பற்றி பிரஸ்தாபிக்காமை தமிழ்ச் சமூகத்தின் ஆதங்கமாயுள்ளது. ஐ.நா. அகதிகள் உயர் ஆணைக்குழுவுடன் நீங்கள் ஆற்றும் பணியை நாம் மதிக்கும் அதேவேளை, குழந்தைகளுட்பட பலரின் உயிரிழப்புக்குக் காரணமான பொருளாதாரத் தடைக்கு முன்னுரிமை அளித்தல் அவசியம் என்பது எமது நிலைப் பாடாகும்.

சீமஸ் கிளியேறி அவர்கள் எழுதிய 'இலங்கையில் வறுமை' என்ற உங்கள் அறிக்கை மிகவும் உன்னதமானது. இவ்வறிக்கைத் தொகுப்பில் காணப்படும் வாசகமொன்று வருமாறு அழுத்திக் கூறியுள்ளது. 'நாட்டில் நிலைபெற்றிருக்கும் நீண்ட அரசியல் பிணக்கு நியாயமான முறையில் தீர்க்கப்படும் வரை பொருளாதார மேம்பாடென்பது ஒரு பகற்கனவே'. இது ஒரு முக்கிய அறிவிப்பு. இலங்கையின் எவ்வகையான முன்னேற்றத்திற்கும் சமாதானம் இன்றியமையாததாகும். சர்வதேச அரங்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் மதிக்கப்படுவதுமான தாபனங்களை உள்ளடக்கியது உங்கள் பேரவை. இத்தாபனங்கள் இலங்கையின் பிணக்குகளை நன்கு அறிந்தவை. ஆகவே பேரவையால் எடுக்கப்படும் சமாதான முயற்சிகள் சர்வதேச ரீதியில் மேலதிக அழுத்தத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்குமெனவும், மேலும் இத்தகைய முயற்சி ஒரு நியாயமானதும் நீடித்த தீர்வுக்கிட்டுச் செல்லுமெனவும் தமிழ்ச் சமூகம் நம்புகிறது. இலங்கைக்கான அரசு சார்பற்ற நிறுவனப் பேரவையின் முயற்சிகளையிட்டு, ஐரோப்பா, வட அமெரிக்கா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இருக்கும் தமிழ்த் தாபனங்களுடன் நாம் கலந்தாலோசித்ததன் மூலம் பின்வரும் விடயங்கள் முக்கியமெனக் கருதுகிறோம். இவற்றையும் பேரவையின் குறுகிய, நீண்ட காலத் திட்டங்கள் உள்ளடக்கிச் செயற்படுவது ஓர் நியாயமான, அர்த்தமுள்ள, பயனளிக்கக்கூடிய செயலென்பது எமது கருத்து. இதனைப் பேரவை ஆராய்ந்து தமது வருங் காலச் செயற்திட்டங்களில் உள்ளடக்கும் என நம்புகிறோம்.

1. உங்கள் பேரவை இலங்கையில் ஓர் நியாயமான தீர்வையிட்டுச் செயற்படுவதெனில் பேரவையின் அங்கத்துவத் தாபனங்கள் மேலதிகமாகத் தங்கள் நேரத்தினையும், பணத்தையும், ஆற்றலையும் பிரயோசனப்படுத்தி, சமாதான முயற்சிக்காகத் தத்தமது அரசுகளை நெருக்குதல் அவசியம். இப்படியான வழிமுறை சர்வதேச மனித உரிமைகள் அரங்கில் எதிரொலிகளைக் கிளப்பும்.

2. தற்போது இலங்கை அரசு பெற்றுவரும் வெளிநாட்டு உதவி, ராணுவத் தேவைகளுக்குப் பாவிக்கப்படுகின்றது. பொருளாதார உதவி அதே தேவைக்கே என்பது வற்புறுத்தப்பட வேண்டும். சர்வதேச சமூகத்திடம் உள்ள பலம் வாய்ந்த ஒரே ஆயுதம் வெளிநாட்டு உதவியாகும். எனவே வெளிநாட்டு உதவி மனித உரிமைகளுடன் சம்பந்தப்படுத்தப்பட வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு ஆக்கபூர்வமான அழுத்தத்தைக் கொணர்ந்து இலங்கை அரசினைச் சரியான நிலைக்குக் கொணர்ந்து பிரச்சினைகளைத் தீர்க்க வழி வகுப்பதற்குச் சர்வதேசச் சமூகத்தினரிடம் இன்றுள்ள ஒரே வழி மனிதவுரிமையையும் வெளிநாட்டு உதவிகளையும் இணைப்பதேயாகும். இப்படியான சம்பந்தப்படுத்தல் வேறு பல சந்தர்ப்பங்களில் பலனளித்துள்ளது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தனிநாயக ... (12ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. இக்கழகதினூடாகப் பல நாடுகளுக்கும் அடிகள் 'தமிழ்த்தூது' சென்று, தமிழறிஞர்களின் தொடர்பையும் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டார்.

இங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை விரிவுரையாளராக இருந்த காலத்தில், கொழும்பில் 'தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்' ஒன்றினை நிறுவி, அதன் மூலமாகவும் தமிழ்ப் பணியினை மேற்கொண்டார். அதேவேளையில் தமிழ்நாட்டில் செயற்பட்ட தமிழ்க் கழகங்களுடனும் தமிழ்ப் பேராசிரியர்களுடனும் தொடர்புகொண்டு அறிஞர்கள் பலரதும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டார்.

உலகத் தமிழ் ஆய்வாளர்களின் ஒத்துழைப்போடு கோலாலம்பூர்(1966), சென்னை(1968), பாரிஸ்(1971) யாழ்ப்பாணம்(1974) ஆகிய நான்கு இடங்களிலும் தமிழாய்வு மாகாநாடுகளைச் சிறப்பாக நடாத்திய பெருமை அடிகளாரைச் சாரும். அதன்பின் மதுரை(1981), சிங்கப்பூர், மொறிஸியஸ் ஆகிய இடங்களில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. இம்மாநாடுகளின் மூலம் தமிழ் மொழியின் மேன்மை பன்னாட்டு அறிஞர்களாலும் உணரப்பட்டிருக்கிறது. 1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாடும் அதன் பின்னணியில் நிகழ்ந்த அரசியல் 'அமளிகளும்' வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ்வகையிலும் தனிநாயக அடிகளாரின் பணி மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். உலகளாவிய நிறுவனமாகத் திகழும் இம்மன்றத்தின் செயற்பாடுகள் தற்போது செயலிழந்து காணப்படுகின்றன. இம்மன்றத்தின் மூலம் சாதிக்கக்கூடிய மொழி, பண்பாட்டு விடயங்கள் பல தேங்கிக் கிடக்கின்றன. ஓரினத்தின் மொழி பேணப்படும் வகையில்தான், அவ்வினத்தின் பண்பாடும், தனித்துவமும் பேணப்படும். எனவே தமிழில், தமிழினத்தில், தமிழர் பண்பாட்டில் அக்கறையுள்ளவர்கள் அடிகளாரின் பணியை முன்னெடுத்துச் செல்ல முன்வர வேண்டும். 'தனிநாயக அடிகளாரின் நினைவுப் பணி மன்றம்' அடிகளாரின் மொழிவழிப் பற்றையும், செயற்பாட்டையும் இளந்தலைமுறையினருக்கு எடுத்துக் காட்டும் வகையிற் செயற்பட வேண்டிய காலகட்டமும் இதுவே.

தனிநாயக அடிகளாரின் தனித்துவத்தை நோக்கும்போது, அவர்கள் பல மொழிகளையும் கற்றறிந்திருந்தார். அதனால் அவர் பன்மொழி இலக்கியம், பண்பாடு, மக்கள் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அறியக்கூடிய வாய்ப்புப் பெற்றிருந்தார். தனிநாயக அடிகள் தாம் பயணம் செய்த கிழக்காசிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் தமிழர்தம் பண்பாட்டுத் தொடர்புகளை ஆராயக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டார். உலக நாடுகளில் தமிழ்க் கல்வி, தமிழர் பண்பாட்டுத் தடயங்கள் என்பன பற்றி ஆராய்ந்து Tamil Studies Abroad என்ற நூலை 1968இல் வெளியிட்டார். அடிகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிய நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் தமிழியல் கல்விக்கு வளம் சேர்ப்பதோடு, பிறமொழியாளரைத் தமிழாய்வுத் துறையில் ஈடுபட வழிகாட்டும் தன்மை வாய்ந்தவை. □

## தமிழ்க் கலா ... (8ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாரியார் அவர்கள் இந்து சமயத்தில் காலத்திற்குக் காலம் தோன்றிய சீர்திருத்தச் சிந்தனையாளர்களான சங்கரர், ராமானுஜர், மத்துவர், விவேகானந்தர் போன்று சமூகத்திற்கும் சமயத்திற்கும் ஆழமான கருத்துக்கள் எதையும் முன்வைக்கவில்லை என வாதிடுவோரும் உண்டு. ஆனால் சமயத்தொண்டு என்பது தனியே தத்துவார்த்த சித்தாந்தத் தேடல்களாகவே இருக்க வேண்டுமென்பதில்லை. சமூகத்தில் மக்களது நற்பண்புகள் சீரழிந்து போகாது சமயப் போத னைகளை பக்தி மக்கள் இயக்கமாக ஆழ்வார்களும், நாயன் மார்களும் முன்நின்று நடத்தித் தமது காலத்தின் தேவை யையொட்டித் தங்கள் பங்களிப்பைச் செய்தது போலவே, இக்காலத்தின் தேவையையொட்டித் தம்மாலான பங்களிப்பைத் தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமல்லாது சகல நாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் வாரியார் செய்துள்ளமை குறிப்பிட வேண்டிய அம்சமாகும். மேலும் மரபு ரீதியாக சமய போதனைகளைச் செய்து வரும் ஓதுவார்களும் காலவோட்டத்தில் வாரியார் பாணியிலேயே இலகு தமிழில் தமது போதனைகளைச் செய்ய ஆரம்பித்தமையையும் அவதானிக்க முடிகிறது. இதனால் இத்துறையில் இக்காலத்தை "வாரியார் பள்ளிக்காலம்" (Variar School Period) எனத் துணிந்து கூறலாம். அண்மைக்காலத்தில் வாரியார் பிரசங்கங்களைத் தமிழ் மக்களின் சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து உயர் குழாத்தினர் வரையும், நாஸ்திகக் கருத்துடையவர் பிற மதக் கருத்துடையவர் என்ற வேறுபாடுடைய சகலரும் கேட்டனுபவித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரது பிரசங்கங்களைக் கேட்டுவிட்டு வீடு திரும்பிய பின்னும் அவரது கணீரென்ற குரலும், கருத்துக்களும் நீண்ட நேரத்திற்குக் காதில் ஒலித்துக்கொண்டிருக்கும். தமிழ் மக்களைப் பொறுத்தளவில் வாரியாரின் இழப்பு, ஓர் கலாசாரப் பிரதிநிதியின் இழப்பாகும். இவ்விழப்புக்குக் கவலையுற்றிருக்கும் தமிழ் மக்கள் யாவருக்கும் மீட்சி தனது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது இழப்பு ஏற்படுத்தியிருக்கும் இடைவெளியை நிரப்பத் தகுதியான ஒருவர் உருவாக வழி சமைப்போமாக. □

## இலங்கை... (21ஆம் பக்கத் தொடர்ச்சி)

3. ஐ.நா.அகதிகள் உயர் ஆணைக்குழுவின் பரிந்துரைப்பின் பேரில் தமிழ் அகதிகளைத் திருப்பியனுப்ப மேற்கத்திய அரசுகள் தயாராகின்றன. நிரந்தரத் தீர்வு காணப்படும்வரை இலங்கைக்கு அகதிகளாகத் திருப்பியனுப்புதல் ஆபத்தானதென்பதை அரசுகளுக்கும் ஐ.நா.அகதிகள் உயர் ஆணைக்குழுவிற்கும் உணர்த்துதல் அவசியம்.

4. இறுதியாக, எமது கலந்தாலோசனையின்போது, உங்கள் பேரவைக்கும் தமிழ்ச் சமூகத்திற்குமிடையே உறவு மிகவும் குறைந்ததே என்பது தெளிவு. ஒவ்வொரு நாட்டிலும் ஈழத்தமிழரின் பிரச்சினைகளையொட்டியும் அவர்கள் நலன் கருதியும் பல்வேறு தாபனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் தொடர்புகளும் உறவுகளும் தங்கள் செயற்பாடுகளுக்கு மிகவும் பயனளிக்கும். அகதிகள் விடயத்திலும் மனிதவுரிமைகள் விடயத்திலும் தமிழ்ச் சமூகம் முன்னெடுப்புகளைத் தந்துதவும். இப்படியான உறவு உயர்மட்டங்களில் நெருக்குதல்களுக்கும் பயன்படும்.

இப்படி மேற்கூறப்பட்டுள்ள முயற்சிகளுக்கு செலவிடும் உங்கள் அனைவரது நேரம், பணம், ஆற்றல் போன்றவை முன்னேற்றத்திற்கான மூலதனமாகும். □

## 1993 இலக்கிய.. (20ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய ஆவணங்கள், மற்றும் அறிஞர்களின் ஆய்வின் தொகுப்பு.

இப்புத்தகம் அமெரிக்க வெள்ளை நிற அதிகாரக் கட்டமைப்பின் தன்மை, அதிகாரத்தில் அங்கம் வகிக்கும் கறுப்பின ஆண்களின் சமூகநிலை, கறுப்பினப் பெண்களின் மீதான கருத்து நிலை, ஒடுக்குதல் என்பவற்றைத் தீவிரமாக அலசுகிறது.

மிகச் சக்திவாய்ந்த ஒரு வரலாற்றுச் சம்பவத்தைப் பற்றி (1991) ஆழ்ந்த ஆய்வுக் கட்டுரைகள் கொண்ட தொகுப்பு இது. நிறவெறி, மற்றும் கறுப்பினப் பெண்கள் மீதான ஒடுக்கு முறையின் பன்முகத்தன்மையை முன்வைக்கும் நூல். மேற்கத்தைய அறிஞர்களையும், மேற்கத்திய இலக்கியவாதிகளையும் ஆழ்ந்து கற்றுப் புலமை பெறும் நமது 'படிப்பாளிகள்' தேடிப் படிக்க வேண்டிய புத்தகங்கள், படைப்புகள் ரோனி மோரிஸனுடையவை.

அவை திறந்து வைப்பது, கறுப்பின மக்களின் நிறவெறிக் கெதிரான போராட்ட மனக்கதவை மட்டுமல்ல, மூடப்பட்டிருக்கும் நமது மனக்கதவையும்தான்.

நமது ஜன்னல்களும் கதவுகளும் வேகமாகத் தட்டப்படுகின்றன.'கேட்பது, அது எனக்கு மிகமிகப் பிடிக்கும்' என்கிறார் ரோனி மோரிஸன். □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஆய்வுத் தகவல் பலகணி

## பிரித்தானிய மியூசியத்தில் இந்து சமயக் கலைக் கண்காட்சி

காலம்: தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.
முடிவு திகதி: 10-04-94

ஏற்பாடு செய்தோர்: Bajaj Auto Ltd.
Birla Technical Services
Mukand Ltd.
Peter Moores Foundation
British Museum Education Services

கட்டணம்: £2; 16 வயதுக்குட்பட்டோருக்கு இலவசம்
கிட்டிய புகையிரத நிலையம்: Holborn Tube Station.



பிரித்தானிய மியூசியம், உலகிலேயே பல்வேறு விடயங்களுக்குப் பெயர் பெற்றது. உலகின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த மனிதனது கலாசாரப் பொக்கிஷங்கள், வரலாற்றுச் சுவடிகள், ஆவணங்கள் போன்றவை இங்கு சேமித்து வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள கலாசார விற்பன்னர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் போன்றோருக்கு இம்மியூசியத்தை வாழ்நாளில் ஒரு தடவையாவது பார்த்துவிட வேண்டுமென்பது ஒரு அவா. இங்கு நுழைவுக் கட்டணம் எதுவும் வசூலிக்கப் படுவதில்லையாயினும், சகல நாட்டுப் பணங்களும் அன்பளிப்புத் தொட்டியில் கிடப்பதைக் காணலாம்.

இங்கு காலத்திற்குக் காலம், ஒவ்வொரு நாகரீகங்களதும் கலைச் செல்வங்களதும் பொருட்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு, ஏற்கனவே மியூசியத்திலுள்ள காட்சிப் பொருட்களுடன் அவ்வவ் நாடுகளது கலைப் பொருட்களும் கொண்டுவரப்பட்டு, ஓரளவுக்கு ஒரு குறிப்பிட்ட நாகரீகத்தின் முழு அம்சங்களையும் பார்ப்பதற்கேற்ற வகையில் ஒழுங்குகள் செய்யப்படும். சென்ற வருடம், கிரேக்க ரோம நாகரீகங்கள் பற்றிய இத்தகையதோர் வெற்றிகரமான கண்காட்சி இடம்பெற்றது.

தற்பொழுது நடைபெறும் இந்து சமயக் கண்காட்சி, இந்துக் கலையின் தத்துவார்த்தப் பின்னணி, இதிகாசக் கதைகள் உட்பட சிற்பம், விக்கிரக வார்ப்பு, கட்டடக் கலை, ஓவியம் போன்ற துறைகளில் கலைரீதியான வளர்ச்சியையும், தொழில் நுட்பவியல் ரீதியான வளர்ச்சிகளையும் ஓரே பார்வையில் மதிப்பீடு செய்யத்தக்க வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, இந்தியாவின் பல்வேறு மகாணங்களைச் சேர்ந்த கலைப்பொருட்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. மேலும், கண்காட்சியை விடப் பல்வேறு தினங்களில் இவை பற்றிய விரிவுரைகள், படக்காட்சிகள், ஆய்வரங்குகள், கலரிப் பேச்சுக்கள், பொம்மலாட்டம், நாட்டியங்கள் போன்றனவும் காலத்திற்குக் காலம் இடம் பெறும். இவை பற்றிய விபரங்களை அறிய விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் வருமாறு: 071 323 8511, 071 323 8854.

இந்நாட்டில் உள்ளவர்கட்கும், லண்டன் வருவோர்க்கும் மேலதிக தகவல் ஒன்று. பிரித்தானிய மியூசியத்தில் கிடைத்தற்கரிய தமிழ்ப் புத்தகங்கள், ஏட்டுச் சுவடிகள் உட்பட சகல மொழிகளைச் சேர்ந்த அரிய நூல்களும் ஆவணங்களும் கிடைக்கின்றன. இந்நூலகத்தில் ஷேக்ஸ்பியர் கையெழுத்துட்பட, உலக அறிஞர்கள் பலரது கையெழுத்துப் பிரதிகள் கிடைக்கின்றன. உலக அறிஞர்கள் பலரையும் இந்நூலகம் உருவாக்கியும் உள்ளது. இங்குதான் கார்ல் மார்க்ஸ் ஏறத்தாழ 38 வருட காலத்தை காலை முதல் இரவு வரை செலவு செய்தார். அவரது பிரபலமான Das Kapital எனும் நூலும் இங்கே இருந்துதான் எழுதப்பட்டது. இந்நூலகம் பூகோள வடிவில் அமைந்தது; மிகவும் அழகானது. இன்றும் பல்வேறு நாட்டு அறிஞர்கள், எழுத்தாளர்கள் நூல் நிலையத்தில் படித்துக் கொண்டிருப்பது ஓர் அன்றாட நிகழ்ச்சி. அத்துடன் எதிர்காலத்தில் வெளிவர இருக்கும் பல அரிய நூல்கள் இங்கு இன்றும் தயாராகிக்கொண்டிருக்கின்றன. எனவே சகலரும் வாழ்நாளில் ஒரு தடவையாவது மியூசியத்தையும் நூல்நிலையத்தையும் வந்து பார்த்துப் பயன் பெற்றுப் போகவேண்டும் என்பது மீட்சியின் அவா.

## பிரித்தானியாவில் இனப்பகையுணர்வு மேலோங்கி வருகிறது

பெரும்பான்மையான மக்கள், பிரித்தானியாவில் இனப்பகையுணர்வு வளர்ந்து வருவதாக நம்புகின்றனர். பிரித்தானியாவிலும் ஐரோப்பாவிலும் இனவுணர்ச்சி எனும் தலைப்பில், தொலைக்காட்சியின் நான்காவது அலைவரிசையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்தே மேற்படி முடிவு தெரியவந்துள்ளது. இவ்வாய்வின்படி பகையுணர்வு வளர்கின்றது என 51 வீதத்தினரும், 31 வீதத்தினர் மாறாது முன்பு போலவேயுள்ளது எனவும், 13 வீதமானோர் பகையுணர்வு வளரவில்லை எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர். 1964இலும் இவ்வாறு நிகழ்த்தப்பட்ட ஆய்வில், வளர்கிறது என 51 வீதத்தினரும், மாறாதுள்ளது என 46 வீதத்தினரும், வளரவில்லையென மீதியுள்ளோரும் கூறியுள்ளனர். இவ்வாய்வில் தனிப்பட்டவர்கள் இனப்பொறை (Racially Tolerant) யினர்களாக மாறிவருவதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இனங்களுக்கிடையிலான திருமணங்களுக்கான எதிர்ப்பில் ஆர்வம் காட்டுவது, கடந்த 25 வருடங்களாகக் குறைந்து வருவதாகவும் பல்லினத்தவர்கள் கற்கும் பாடசாலைகள் ஊக்கப்படுத்தப்படுவதாகவும் கணிப்புக் கூறுவதுடன், வெளிநாட்டவர் மீது குடிவரவுக் கட்டுப்பாடுகள் கொண்டுவர வேண்டும், அவர்களை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு அதிக ஆர்வமின்மையும் தெரிய வந்துள்ளதாகக் கணிப்புக் கூறுகிறது. □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கர்ணன் கதை: தற்கால ஈழத் தமிழருக்கு ஒரு படிப்பினை

சில மாதங்களுக்கு முன்னர் திரு. சுகிசிவம் அவர்கள் லண்டன் ஆர்ச்வே முருகன் கோவிலில் ஆற்றிய உரையை, 'மத்தாப்பு' வீடியோ கலாசார இதழினர் வெளியிட்டுள்ளனர். (இப்புதிய வீடியோ இதழ் தற்பொழுது லண்டனிலுள்ள வீடியோக் கடைகளில் விற்பனைக்கு வந்துள்ளது.) இதில் சுகிசிவம் அவர்கள், மகாபாரதக் கதையில் வரும் கர்ணன் பாத்திரத்தைப் பற்றிய கதையம்சங்களை விளக்கி, நல்ல பல கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

அர்ச்சுனன் தனது வில் வித்தைகளைச் செய்து காட்டிச் சபையில் பெரும் பாராட்டைப் பெற்று வில்லுக்கு விஜயன் ஒருவன்தான், இவனுக்கு நிகரானவர் பாரினில் யாரும் போர்க் கலையில் கிடையாது எனும் புகழை அடைந்தான். இவ்வேளையில் கர்ணன் சபையில் எழுந்து தன்னாலும் பல திறமைகளைக் காட்ட முடியும் எனக் கூறி அனுமதி கேட்க, திருதராஷ்டிரனும் அதற்கு அனுமதி கொடுத்தான். அர்ச்சுனன் முன்பு செய்து காட்டிய சகல சாகசங்களையும் இவன் செய்து காட்டியதுடன், அதற்கு மேலதிகமாகத் தான் துரோனாச்சாரியாரிடம் கற்ற வித்தைகளையுஞ் செய்து காட்டினான். அர்ச்சுனன்தான் மகா திறமைசாலி என எண்ணிய சபையினர்க்கு இது பெரும் ஆச்சரியத்தையும், ஏமாற்றத்தையுங் கொடுத்தது.

இவ்வேளையில், கர்ணன் அர்ச்சுனனை நேருக்கு நேர் பலப் பரீட்சைக்கு அழைத்தான். உடனே துரோனாச்சாரியார் குறுக்கிட்டு, அர்ச்சுனன் ஓர் அரச குமாரன் அவனைப் போருக்கு அழைக்க உனக்கு என்ன தகுதியிருக்கிறது? உனது குலம் என்ன என்று அறிய, உனது தகப்பன் பெயர் என்ன என்று தெரியாது. இந்நிலையில் நீ அர்ச்சுனனுடன் போர் புரிய முடியாது எனக் கூற, கர்ணன் மிக அவமானமடைந்து, கண் கலங்கிய நிலையில் மனமுடைந்து தலை குனிந்து போனான்.

உடனே துரியோதனன் எழுந்து, கர்ணனை வரவழைத்துத் தனது நாடுகளில் ஒன்றான அங்கத நாட்டிற்கு அரசனாக மணி முடி தரித்துத் தன் சிம்மாசனத்தில் தனக்கு அருகில் உட்கார வைத்து, இனிமேல் கர்ணன் ஒரு அரசன், இனிமேல் யாவரும் ஓர் அரசனுக்குத் தரவேண்டிய மரியாதையை அவனுக்குக் கொடுக்க வேண்டும் என்றான். கர்ணன் மனம் குளிர்ந்தது. இந்நிகழ்ச்சியை வாழ்நாள் முழுவதும் மறவேன் எனக் கர்ணன் கூறியதோடு, எந்த இடர் வரினும் துரியோதனனைத் தான் கைவிடப் போவதில்லை என முடிவெடுத்துக் கொண்டான்.

இக்கதையைக் கூறிய சுகிசிவம் அவர்கள் யாவருக்கும் ஓர் அறிவுரையையும் உபதேசித்தார். அதாவது ஒருவரிடம் உள்ள திறமையை அங்கீகரிக்க வேண்டும்; இல்லையேல் அவரைத் தீயவர்கள் பயன்படுத்தி விடுவர். இதுவே கர்ணனுக்கும் நடந்தது. தீயவர்களான துரியோதனனாதியர், கர்ணனின் திறமையை அங்கீகரித்தனர்; கர்ணனும் தீயவர்கள் பக்கம் போனான். அங்கீகாரம்(Recognition) என்பது ஒரு முக்கியமான விடயம். இதனை உரியவர்கட்கு நாங்கள் கொடுத்தால் அவர்கள் நல்ல வழியில் நின்று நடப்பர்.

இன்று உலகில் நடக்கும் போர், கலகங்கள், பிரச்சினைகள் முதலியவற்றிற்கும் இவ்வங்கீகாரந்தான் முக்கியமான பிரச்சினை. இதனை உரியவர்களுக்கு வழங்காததாலேயே, உலகம் இன்று குழம்பிக் கொண்டிருக்கின்றது. எனவே நாம் தகுதியானவர்களை அங்கீகரித்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றார். □

மீட்சி:
பத்திரிகையாளர்கள், ஆய்வாளர்கள், பல்துறை அறிஞர்கள், சமூகத் தொண்டர்களை உள்ளடக்கிய ஒரு சுயேட்சைக் குழுவின் படைப்பு
வெளியீட்டாளர்:
TAMIL INFORMATION CENTRE, THAMIL HOUSE, 720 ROMFORD ROAD, LONDON E12 6BT TEL: 081-514 6390
சந்தா (12 இதழ்கள்): U.K.: £6.00 வெளிநாடுகள்: £10.00